25 JAN 1960
MADRAS

தமிழ் வாழ்க!

துணர் ௩௫. மலர் ௰.

தமிழ்ப் பொழில்

விகாரி - தை

1960

கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

தொண்டு தமிழ் முன்னேற்றம்

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

பொழிற்றொண்டர்:

ச. சுயம்பிரகாசம், B. A., B. L.,

தமிழ்ப் பொழில்.

பதிப்பாசிரியர் குழு.

1. திரு. ச. சுயம்பிரகாசம், B. A., B. L., தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்; பொழிற்றொண்டர்.
2. திரு. நீ. கந்தசாமி பிள்ளை, பள்ளியகரம், தஞ்சாவூர்.
3. சித்தாந்த கலாநிதி ஔவை. சு. துரைசாமி பிள்ளை,
பேராசிரியர், தியாகராயர் கல்லூரி, மதுரை.
4. வித்துவான், க. வெள்ளைவாரணனார்,
ஆராய்ச்சித்துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.
5. திரு. சி. வேதாசலம், B. A., B. L.,
அமைச்சர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.
6. திரு. வித்துவான் ச. பாலசுந்தரம்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

உள்ளுறை

துணர் ௩௫ — மலர் ௰

		பக்கம்
1.	பண்டாரத்தார் மறைவு பொழிற்றொண்டர்	289
2.	இரங்கற் கூட்டம் கரந்தைத் தமிழ்ச் சங்கம்	291
3.	பண்டாரத்தார் கையறு நிலை வித்துவான், ச. பாலசுந்தரம்	293
4.	அன்னையின் கனவு வித்துவான், சொ. சிங்காரவேலனார்	294
5.	நிழல் தேவராசன், பி. ஏ.,	295
6.	கரந்தைத் தமிழ்ச் சங்க நிகழ்ச்சிகள்	296
7.	தமிழில் தாவரம்: கருவிளம்—கூவிளம் கு. சீநிவாசன், M. Sc.,	299
8.	திருக்கோவையார் வித்துவான், தி. சங்குப் புலவர்	302
9.	வரலாறு கண்ட வரதட்சணை வித்துவான், சி. கோவிந்தராசன்	306
10.	ஆற்றுப்படை மது. ச. விமலானந்தம், எம். ஏ.,	308
11.	பழந்தமிழ் நாட்டில் கலை வளர்ச்சி சாமி. சிதம்பரனார்	313

2—1—60-ல் காலஞ்சென்ற

அண்ணாமலைப் பல்கலைக் கழக வரலாற்றாராய்ச்சித்துறை விரிவுரையாளர்,

தி. வை. சதாசிவப் பண்டாரத்தார்.

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௲௯௱௯௰௧	மலர்
௩௫	விகாரி, தை 1960 ஜனவரி, பிப்ரவரி	௰

பண்டாரத்தார் மறைவு.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்து வரலாற்றாராய்ச்சித்துறையில் பலவாண்டுகள் பணியாற்றித் தென்னக மன்னர் மக்களாயவர் பற்றிய வரலாற்றுண்மைகளைத் தெள்ளிதின் விளக்கும் நூல்கள் பல வற்றின் ஆசிரியரான தி. வை. சதாசிவ பண்டாரத்தா ரவர்கள் (2—1—1960) சனிக்கிழமை இறைவன் திருவடி நீழலடைந்தமை குறித்து வருந்துகிறோம். சென்ற திங்களிதழில் பாரதியாரையிழந்தமை குறித்துவருந்தினோம். ஒரு திங்களளவிற்குள் தமிழகத்தின் இரு பெரும் பேராசிரியர்களை இழக்கநேரிட்டமையை எவ்வாறு ஆற்றுவது? அறிஞருலகம் இவ்வீரிழப்புக்களாலும் மிகவும் துன்பமடைந்துள்ளது.

கவிஞர் பாரதிதாசனார் நாவலரின் இழப்பைக்குறிப்பிட்டபோது 'சாவிற்குப்பசியென்றால் எவ்வளவோ பதர்கள் நாட்டிலுள்ளனவே! அவைகளையுண்டு பசியடங்கலாகாதா? விதை நெல்லையல்லவா விழுங்கிவிட்டது." என்று குறிப்பிட்டார். ஆம்! உண்மை! அண்மையில் மறைந்த நாவலரும் பண்டாரத்தாரவர்களும் தாங்கள் மேற்கொண்ட துறைக்கு வித்தாக விளங்கியவர்கள். அவர்கள் ஆய்ந்து கண்ட துறைகளில் பல அறிஞர்கள் தோன்றுவதற்கு முதலாகவிருந்தவர்கள். ஆகவே! வித்தைச்சாவு விழுங்கிவிட்டது' என்று கவிஞர் கூறும் உரை நடைக்கவிதையினை நாமும் இவண் கூறுகின்றோம். சங்ககாலக் கவிஞரொருவர் பேராற்றல் வாய்ந்த மன்னனொருவனின் இழப்பை இங்ஙனமே "நனிபேதையே! நயனில் கூற்றம், விரகின்மையின் வித்தட்டுண்டனை' என்றார்.

பண்டாரத்தாரவர்கள் தென்னாட்டு வரலாற்றை விரித்தற்கு வேண்டிய எல்லாத்துறையையும் அறிந்த மூதறிஞராகத் திகழ்ந்தார். வரலாறு எழுதுவாருக்கு ஆங்கிலம், இலக்கியம், கல்வெட்டு ஆய துறைகள் மிகவும் இன்றியமையாதவை. இத்துறைகளில் பண்டாரத்தாரவர்கட்கு நல்ல பயிற்சியும் புலமையுமிருந்தது. எல்லா வற்றிற்கும் மேலாகத் தென்னாட்டு வரலாற்றை நன்கு புதுக்கி உண்மைகாணவேண்டுமென்னும் ஆர்வம் பண்டாரத்தாரவர்களிடம் நிறையவிருந்தது. அவர் தம் வாழ்நாளின் குறிக்கோள் இதுவாக விருக்கவேண்டுமென வரையறுத்துக்கொண்டார். பொருளீட்டு

தற்கும் புகழ்பட வாழ்தற்கும் தாம் விரும்பிய கல்வித்துறை கிடைக்கப் பெறுமையால், கிடைத்த துறையை மேற்கொண்டு தேர்வளவில் ஆய்ந்து தேர்வெழுதி, பின்னர் அத்துறையில் எவ்வகையான மனச் சார்புமின்றி வீணே காலந்தள்ளும் அறிஞர் இக்காலத்தில் பலருளர். எழுதும் சிலரும் தமிழருக்கொவ்வாத் தகைமைகளைத் தமிழருடைய தெனக் காட்டுவாரும், தமிழகத்தின் தனிச் சிறப்புக்களைக் கூறவும், அதனைப்பேணவும் மனமின்றி, மற்றவருக்கும் உரிமையாக்கிக் குழறுபடை செய்வோருமாகவுள்ளனர். இந்நிலையில் நடுநின்று உண்மைகண்டு உலகுவப்பக் கூறும் பண்டாரத்தார் போன்ற வரலாற்றாராய்ச்சியாளரை யிழந்தது தமிழர்கட்குப் பேரிழப்பாகும்.

நம் சங்கத் தலைவர் காலஞ்சென்ற தமிழவேளவர்களுடன் நெருங்கிய தொடர்புகொண்டவர்கள். பண்டாரத்தாரவர்கள் வரைந்த 'பாண்டியர் வரலாறு' என்னும் நூல் பகுதிபகுதியாகத் 'தமிழ்ப் பொழில்' வாயிலாக வந்தமையைத் தமிழுலகறியும். சங்க ஆண்டு விழாக்களில் பங்கு கொண்டு விரிவுரையாற்றியுள்ளனர். பதிப் பாசிரியர் குழுவில் ஒருவராக இருந்து வரலாற்றுத் தொடர்பான நெறியில் பொழிலின் மேம்பாட்டிற்கு அவ்வப்போது அறிவுரை வழங்கியும் கட்டுரை வழங்கியும் தொண்டாற்றினர். கரந்தைத் தமிழ்ச்சங்கத்து இராசேந்திரன் செப்பேடுகளிற்கண்ட செய்திகளைப் பொழிலில் விளக்கி வந்தார்கள். இங்ஙனம் தமிழவேள் காலந் தொடங்கி மறையுங்காறும் சங்கத்தொடும் சங்க வெளியீடாகிய தமிழ்ப்பொழிலுடனும் நெருங்கிய தொடர்புகொண்டிருந்தார்கள்.

தமிழ் கூறும் நல்லுலகிற்கு வேந்தர் முரசு முழங்குதானை மூவரென்றாலும் தமிழ்ப்புலவராயினுரெல்லாரும் பாண்டிய மன்னர் களைப்பெரிதும் போற்றியுள்ளமையை அறிஞர் அறிவர். நம் பண்டா ரத்தாரவர்களும் பாண்டிய மன்னர்களின் வரலாற்றையே முதற்க ணெடுத்து ஆய்ந்து விளக்கினர். சோழர் வரலாற்றிலும் அய்யா அவர்கட்கு அளவற்ற ஈடுபாடுண்டு. பிற்காலச்சோழர் பேரரசு தோன்றிய வரலாற்றை அவர்கள் விளக்குந்திறம் நம்முள்ளத்தைக் கவருமியல்பினதாகும். வரலாறு எழுதுவார் கையாளும் உரை நடை படிக்கச்சலிப்பாகவிருக்கும். அய்யா அவர்களின் நடை கதை சொல்லுவதுபோலத் தொடர்புபட்டு இழுமெனச் செல்லும் இயல் புடையது. இதற்குக் காரணம் அய்யா அவர்கள் தாம் எழுதுதற்கு மூலமாக அறிந்த செய்திகளைத் தம்முடையதாக்கிக்கொண்டு தாம் கூறுவது போலக் கூறும் வளஞ்சான்ற புலமைத் திறமாகும். பாண்டியர் சோழர் கால அரசியல் பற்றிய அய்யா அவர்களின் பொதுவான குறிப்புக்கள் மக்களாட்சி மலர்ந்துள்ள இக்காலத்தில் அரசியல் துறையில் நல்ல உதவி செய்யவல்லதாகும். இத்தகு சிறப்புக்களமைந்த பண்டாரத்தாரவர்களின் இழப்புக்கு வருந்துவ தோடு, அவர் வழி நின்று தமிழர்க்கும் தமிழுக்கும் தொண்டு செய்வதே நம்மனோர் கடனுமெனவும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

(பொழிற்றொண்டர்.)

கரந்தைத் தமிழ்ச் சங்கம் தஞ்சை.

இரங்கற் கூட்டம்.

அண்ணுமலைப்பல்கலைக் கழகத்து வரலாற்ருராய்ச்சித்துறையில் பல ஆண்டுகளாகப் பணிபுரிந்து வந்தவரும், நம் சங்கஅன்பரும் சிறந்த கல்வெட்டாராய்ச்சியாளருமாகிய தி.வை. சதாசிவ பண்டாரத்தாரவர்கள் 2—1—60-ல் இறைவன் திருவடி நீழலடைந்தமை குறித்துக் கரந்தைத் தமிழ்ச்சங்கப் பெருமன்றத்தில் சங்கத்தலைவர், ச. சுயம்பிரகாசமவர்கள் தலைமையில் 6—1—60-ல் புதன்கிழமை மாலை இரங்கற்கூட்டம் நிகழ்ந்தது.

சங்கத்தலைவரவர்கள் முன்னுரையாகக்காலஞ்சென்ற பண்டாரத்தாரவர்களின் இழப்பு நாட்டிற்கீடுசெய்ய முடியாததாகுமென மொழிந்தனர். மேலும் அண்மையில்தான் பாரதியாரை யிழந்து வருந்திஞேம். அதனின்றும் தெளிவதற்குள் பண்டாரத்தாரவர்களை இழந்தது மிக்க துன்பந்தரவல்லதாகவுள்ளதென்றனர். பண்டாரத்தாரவர்கள் தமிழவேள் காலந்தொட்டுச் சங்கத்தொடும் தமிழ்ப்பொழிலொடும் தொடர்புகொண்டு விளங்கியமையை யாவருமறிவரென்று கூறினர்.

உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளி யாசிரியர், திரு. சம்பந்தசாமி பிள்ளை சங்கத்தொடு அவர்க்கிருந்த பழமைத்தொடர்பினைவிளக்கினர். புலவர் கல்லூரி விரியுரையாளர் திரு. கோவிந்தராசன் பேசும்போது குடந்தையில் பாணுதுறை உயர்நிலைப்பள்ளியில் பண்டாரத்தாரவர்கள் ஆசிரியராகவிருந்தபோது தனக்கு ஆசிரியராகத் திகழ்ந்தாரெனக் குறிப்பிட்டனர். ஆங்கிலத்திலுள்ள வரலாற்று நுணுக்கங்களை நன்கு தேர்ந்து தமிழில் வரலாற்றுத்துறையில் நன்கு பயன்படுத்தியவரென்றனர். வரலாறெழுதுவாருக்கு நடுநிலை வேண்டும், பண்டாரத்தாரவர்கள் மிகவும் நடுநிலையுடையவர், வரலாற்றில் மறுப்பிற்கும் வெறுப்பிற்கும் இடமில்லை, இதனைப்பண்டாரத்தார் வரலாற்று நூற்களில் காணலாம், இன்னும் சில ஆண்டுகளிருந்திருந்தால் பாண்டிய சோழர் வரலாறுகளை வ்ரையறைப்படுத்தியது போலப் பல்லவர் பற்றியும் பல புதிய நுணுக்கங்களை நாமறியக்கூடும், தம்மிடம் பயின்ற மாணவர்கள் கல்வெட்டுத்துறையில் பயிற்சிபெறத் தம்மாலானவற்றைச் செய்துதவும் தண்ணளியாளரென்றனர். புலவர் கல்லூரி விரிவுரையாளர் ச. பாலசுந்தரம் தமிழ்ப்பொழிலொடு அவருக்கிருந்த தொடர்பினை விளக்கிப் பேசினர். உயர்நிலைப்பள்ளியாசிரியர் திரு. இராமமூர்த்தி பேசுகையில் தென்னக வரலாற்றை எழுதியவர் பலரென்றும், அவர்கள் எழுதிய குறிக்கோள் வேறு, பண்டாரத்தாரெழுதிய குறிக்கோள் வேறென்றும் விளக்கினர். தென்னுட்டு வரலாறு வரலாற்ருசிரியர்களால் ஒதுக்கப்பட்டது; ஆனல் தென்னக

வரலாறு இந்திய வரலாற்றுக்கு அடிப்படையானதென முதற்குரல் கொடுத்து உருவாக்கிய பெருமை நம் பண்டாரத்தாரவர்களைச் சாருமென்றனர்.

மேலும் பேசுகையில், வரலாற்றிற்கு இலக்கியங்கள் மிகவும் பயன்படவல்லனவென்றும், ஒரு இலக்கியம் தான் தோன்றிய காலச்சூழ்நிலையை நன்கு விளக்கவல்லதென்றும், தென்னாட்டு வரலாற்றை எழுதிய பலருக்குத் தமிழிலக்கிய இலக்கணப் புலமை கிடையாதென்றும், அவ்வகையில் பண்டாரத்தாரவர்கள் தமிழ்ப் புலமையும் கல்வெட்டாய்வுப் புலமையும் ஆங்கிலப்புலமையும் பெற்ற பேரறிஞராகத் திகழ்ந்தாரெனவும்குறிப்பிட்டனர். வீரராகவ உயர் நிலைப்பள்ளித் தமிழாசிரியர் திரு. ஏகாம்பரநாதரவர்கள் உரையாற்றும் போது பண்டாரத்தார், அமுதலிங்கம் பிள்ளை போன்றவர்கள் புலமையும் திறமையும் பயன்படச் செய்தவர் தமிழவேளவர்களாவரென்று மொழிந்தனர். எளிமையாகப் பழகும் இயல்பினர். இனிமையாகச் சுருக்கமும் தெளிவும் பொருந்தப் பேசும் பண்பினரென்று மொழிந்தனர். இடைவிடாது எதனையும் ஆய்ந்து கொண்டிருப்பதையே தமது பொழுதுபோக்காக வுடையவர். செயற்கையில் ஆராய்ச்சி யாளராகப் பலர் திகழு மிந்நாளில், பண்டாரத்தார் போன்ற பிறவி ஆராய்ச்சியாளரை யிழந்தது வருந்துதற் குரியதாகு மென்றனர்.

தலைவர் முடிவாகச்சங்கத்தின் வருத்தத்தைத் தெரிவிக்கும் முடிபினைப்படிக்க எல்லோரும் எழுந்து நின்றனர். இத்துடன் கூட்டம் முடிந்தது.

கையறவு.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் கல்வி நிலையங்களின் ஆசிரியர் களில் ஒருவரும், கல்வி நிலையங்கள், சங்கம் ஆகியவற்றின் விழாக் காலங்களில் பலவகையான தொண்டுகளில் ஈடுபட்டுப் பெரிதும் உழைத்தவரும் சிறந்த பொதுநலத் தொண்டருமான சீனிவாச நாயுடு அவர்கள் 8–1–60 வெள்ளிக்கிழமை காலை இயற்கை யெய்தியமைக்கு மிகவும் வருந்துகின்றோம். நம் வருத்தத்தினை அவர்கள் குடும்பத் தாருக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(பொழிற்றொண்டர்)

வரலாற்றுத்துறை பேரறிஞர்

தி. வை. சதாசிவ பண்டாரத்தார் கையறுநிலை.

1 முழங்குகடல் சூழ்குமரி நாட்டினிலே
முகிழ்த்தறிவு மொய்ம்பு தாங்கி
வழங்குமொழி யாவினுமுன் வளம்படைத்து
வயங்குமெழில் மாட்சி ஏந்தித்
தழங்குநறுஞ் செந்தமிழிற் சமைந்தவர
லாறிலெனும் சழக்கு நீங்க
ஒழுங்குபெற ஓதியுல கொப்பவர
லாறுரைத்த ஒருவ! அந்தோ!

2 மறைந்ததனல் மறைத்ததனல் வண்டமிழின்
மாட்சியெலாம் மறந்து சீர்த்தி
குறைந்திருந்த தமிழரெலாம் குமுறிஎழத்
தமிழர்பழங் கோளெ டுத்து
நிறைந்த பெரும் புலமையறிவாய்வுரையால்
வரலாற்றின் நிலைமை யாவும்
அறைந்ததமிழ் அறிஞ! சதாசிவப்பெரியோய்
மறைந்தனையோ அந்தோ! அந்தோ!

3 தேவேந்தி அறம்புரிந்த செப்பேடு
கல்வெட்டுச் செலவு நூல்கள்
பாவேந்தர் உரைத்ததொகைப் பாக்களொடு
பைந்தமிழ்நூற் பரப்பில் நீந்தி
மூவேந்தர் ஆட்சிபிறர் முயற்சியெலாம்
உரைத்ததமிழ் முதல்வ! உன்னைச்
சாவேந்திச் சென்றதெனில் தமிழர்படுந்
துயரெடுத்துச் சாற்றப் போமோ

4 தகுதியறிந் தெந்தமிழவேள் நினது
சால்புணர்த்தத் தமிழ்ப்பொ ழிற்கண்
பகுதிபெறப் பாண்டியர்தம் பண்டைவர
லாறெழுதப் பணித்து நட்பின்
மிகுதியினல் மேம்படுத்த மேலோய்சொல்
லெளிமையறம் மேவி ஆன்றோர்
தொகுதியிலே விளங்கியநற் றோன்றலுனை
இழந்ததுயர் சொல்லப் போமோ

5 முருகியசெந் தமிழ்அண்ணு மலையரசர்
முயன்றமைக்க முறையால் நாளும்
பெருகியபல் கலைக்கழகத் தாராய்ச்சித்
துறையிலரும் பேரா சானுய்ப்
பரவுநறும் புகழ்வளர்க்கும் 'பண்டாரத்தார்'எனவே
பாரோர் போற்ற
அரியபல தொண்டாற்றி அமைந்தபுகழ்
அண்ணல்நீ மறைந்தாய் அந்தோ!

ச. பாலசுந்தரம்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

கவிதை :

அன்னையின் கனவு*

வித்துவான், திரு. சொ. சிங்காரவேலனார்,
(தருமையாதீனத் தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர்.)

பெற்றெடுத்த குழவிதனைப்
பிரிந்துவிட்டேன் இன்று;
பேதைமையிற் சுழன்றுமனம்
வாடுகிறேன் நின்று:
உற்றெழுந்த அன்பினொடும்
உயிரவனைத் தேடி
உலர்கின்றேன்; ஒவ்வொருநா-
-ளும்மிங்குப் பாடி! (1)

கண்ணீரில் மிதக்கின்றேன்
கண்ணனையான் என்னைக்
கைவிட்ட நாள்முதலாய்;
கலுழ்ந்திடுவே னென்னை
விண்ணுலகிற் செலுத்தியிடுங்
கனவிலவன் றன்னை
விரைந்தறிந்தேன் அநுபவத்தை
விளம்பியிடல் கேளீர்! (2)

சுடர்விளக்கை யேந்தியகைச்
சிறுவர்பலர் அங்கே
சூழ்ந்திருந்தார்; மாலையெனச்
சூழுமவர் பங்கில்,
இடர்முகத்தின் ஒளியோடே
யானுமவன் தன்னை
எங்கெங்கே என்றலைந்து
தேடுவேன் முன்னே! (3)

---

* WILLIAM BARNES என்ற கவிஞரின் "THE MOTHER'S DREAM" என்னுந் தலைப்புடைய கவிதையைத் தழுவிய மொழிபெயர்ப்பு ஆக்கம்.

அணைந்திருந்த விளக்கேந்தி
அணைந்தானென் செல்வன்;
அணைந்தவிளக் கேந்தியமைக்
கேதுவினைச் சொல்வன்;
"மனந்தளர்ந்து தாயேநீர்
மலிந்துகுத்த கண்ணீர்
மகிழ்விளக்கை அணைத்ததினி;
மனந்தளரேல்" என்றான்! (4)

அவனுரைத்த இனியமொழி
மெய்ம்மொழியே யன்றோ?
ஆயினுமென் னன்புமனம்
படுந்துயரம் ஒன்றோ?
தவநினைவின் நறுமலராம்
செல்வனவ னோடும்
தனிமகிழ்விற் கலந்திருக்கும்
நினைவுளத்தில் ஓடும்! (5)

நிழல்.

தேவராசன், பி. ஏ.,
மேட்டூர்—தேன்மழை, ஆசிரியர் கல்லூரி, குமரபாளையம்.

1. தமிழ்மொழியில் யாத்தும் தமிழ்ப்பண்பு தூய்மை
கமழாத போலிக் கவிபோல்—உமிழ்சுடரால்
சீருருவங் கைகால் திகழும் குறுஞ்சிரிப்பு
நேர்முகத்தைக் காட்டா நிழல்.

2. உள்ளத் துரம்பெற்றார்க் கூறு மிகச்செயினும்
எள்ளத் தனையும் இடரெய்தார்—உள்ளபடி
நீரில் மிகநனைந்து நின்றும் நிழல்சிறிதும்
ஈரம் உறுதல் இலை.

கரந்தைத் தமிழ்ச் சங்க நிகழ்ச்சிகள்.

தமிழகத்தினின்றும் மலேயாவிற்குச் சில தலைமுறைகட்கு முன்னர்ச் சென்றவர்களின் வழியினரும், சில ஆண்டுகட்கு முன்னர்ச் சென்றவர்களுமாகவுள்ள தமிழ் பயிற்றுவிக்கும் ஆசிரியர் குழுவொன்று தென்னகத்தைக்காண வந்தனர். அவர்கள் 1–1–60 திங்களன்று நம் சங்கத்திற்குப் போந்தனர். தமிழ்ச் சங்கச் சார்பில் அக்குழுவினருக்கு வரவேற்பளிக்கப் பெற்றது. இந்நிகழ்ச்சிக்குச் சங்கத் தலைவர் திரு. ச. சுயம்பிரகாசமவர்கள் தலைமை தாங்கிக் குழுவினரை வரவேற்றார். வரவேற்புரையில் சங்கத் தலைவரவர்கள் தமிழ், தமிழர் முன்னேற்றத்தை அடிப்படையாகக்கொண்டது நம் சங்கமென்றும், நல்ல தமிழ் தொண்டென்றால் வெளிநாட்டில் தமிழுக்காக வேலை செய்வதுதானென்றும், வந்துள்ள அன்பர்கள் வெளிநாடு சென்றுள்ள நம்மவர் தமிழையும், தமிழ்ப் பண்பாட்டையும் மறவாதிருக்கத் தொண்டுகள் செய்வது குறித்துச் சங்கம் பாராட்டுகின்றதென்றும், நம் சங்கத்திலிருந்த பல அறிஞர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தமிழ்த் தொண்டு செய்துகொண்டிருக்கின்றனரென்றும் குறிப்பிட்டார்கள்.

ஆசிரியர் குழுவின் சார்பாகத் திரு. வடிவேலு அவர்கள் சங்கமளித்த வரவேற்பிற்கு நன்றி தெரிவித்துச் சிறிதுநேரம் பேசினார். அவர் தம்முடைய பேச்சில் தாய்த்திருநாட்டில் தாம் கண்ட காட்சிகளையும், செய்திகளையும் விரித்துரைத்தார்.

த்மிழ்நாட்டை விட்டு மலேயா சென்ற தமிழர்கள் நாங்கள். தாய்மொழி, அது படித்த உள்ளம், பண்பாடு ஆயவைகளில் தமிழர்களாகவேயுள்ளோம். ஆனால் அரசியல் முறையில் நாங்கள் மலேயர்கள் என்றுதான் கூறவேண்டும். வரலாற்றுச் சிறப்புமிக்க தென்னாட்டில் பதினான்கு நாட்களாகச் சுற்றிவருகின்றோம். கண்ட காட்சிகள் மிகவும் சிறந்தவை. எங்கள் கண்களெல்லாம் மலேயாக் கண்களாக ஆகிவிட்டன. மலேயா என்ற பெயர்கூட மலைநாடு என்ற திரிபாக விருக்கலாமெனக் கூற இடமுண்டு. மலைசூழ்ந்த நாடு ஆதலின் மலைநாடு அல்லது மலேயா என்றனரென்று கூறலாம். மலேய மொழியும் கலப்பு மொழியேயாகும். இது தமிழும் வடமொழியும் பெருமளவிற் கலந்துள்ள மொழியாகும். மலேய நாட்டில் மூவாறு என்ற வோரிடமுண்டு. அங்கு மூன்று ஆறுகள் ஒன்றுகூடுகின்றன. நாட்டின் பெயர் மொழியமைப்பில் மட்டுமன்று தமிழ்நாட்டு மன்னர்கள் அங்குவந்து ஆண்டுள்ளமைக்குச் சான்றுகளும் உள்ளன. காடா என்ற தீவில் சோழர்காலச் சின்னங்கள் இன்றும் அகப்படுகின்றன. மலைநாட்டு செகப்பிரியரெனப் போற்

றப்படும் 'அப்துல்லா முன்சி' என்பவர் ஒரு தமிழ்ப் பெண்ணின் மகனுவர். மலாக்காவென்னும் பகுதியில் இன்றும் பழங்காலத் தமிழ் நாட்டுச் செட்டிமார்கள் வாழ்கின்றனர். நில அமைப்பிலும் தென்னகத் தாயை எப்பொழுதும் நோக்கிக்கொண்டிருக்கும் சேய்போல மலேய நாடு விளங்குவதைக் காணலாம்.

மலேய நாட்டில் முப்பது நூருயிரவர் மலேயருள்ளனர். முப்பது நூருயிரவர் சீனர் உள்ளனர். ஆறு நூருயிரவர் தமிழர் உள்ளனர். ஒரு நூருயிரம் பிறமக்கள் உள்ளனர். இவ்வாறு பல நாட்டு மக்களின் தொகுப்பாக மலேய நாட்டு வாழ்வு அமைந்துள்ளது. மலேய நாட்டு அரசியலில் தமிழர்கட்குரிய பங்கு நன்முறையில் அளிக்கப்பெறுகின்றது. தமிழர் தங்கள் மொழி, கலை, நாகரிகம் ஆயவற்றைப் பேணிக்கொள்வதில் எவ்வகையான தடையுமில்லை.

தமிழ்நாட்டில் பெருமைக்குரிய பலவற்றைக் கண்டாலும் குறைகளும் மலிந்துள்ளமை கண்டோம். தாய்மொழியைத் தமிழ் மக்கள் கையாளும் முறை மிகவும் வருந்தக்கூடியதாகும். சென்னையில் இறங்கியதும் அந்நகரின் பல பகுதிகளைச் சுற்றினேம். அவர்கள் பேசும் மொழி தமிழா? அவர்களும் தமிழராவென நினைக்கு மளவிற்கு தாய்மொழியாம் தமிழைச் சிதைத்துப் பேசுகின்றனர். எங்கள் நாட்டு தமிழ் மக்கள் சார்பாகவுள்ள அமைச்சர் கூறிய வுரை எங்கள் நினைவிற்கு வந்தது. 'சென்னையைப் பார்த்துவிட்டு இது தான் தமிழ்நாடென்று எண்ணிவிடாதீர்கள்' என்பதே அவ்வுரையாகும். என்ருலும் உள்நாடுகளில் தமிழ் மக்கள் வழங்கும் மொழியும் பண்பாடும் எங்கள் உள்ளத்தைக் கவர்ந்தன. இப்பொழுது தமிழ் நாடெங்கணும் பல சங்கங்கள் தோன்றி நல்ல தொண்டு செய்துவருகின்றமையை யுணர்ந்து மகிழ்கின்ருேம். எவ்வகையா முன்னறிவிப்புமின்றி வந்த எங்கட்கு சங்கத் தலைவர் வினைக்குழுவினர், உறுப்பினர் போன்ற பெருமக்களெல்லாம் இவண் குழுமி எங்கட்கு வரவேற்பளித்தமைக்குக் குழுவின் சார்பில் நன்றி கூறுகின்றேனெனக் கூறிமுடித்தார்.

புலவர் கல்லூரித் துணைத்தலைவர் ந. இராமநாதன் சங்க நோக்கம், அது இயற்றிய தொண்டு முதலியவற்றையெல்லாம் விளக்கியதோடு சங்கம் இன்னுஞ்சில ஆண்டுகளில் பொன்விழாக் கொண்டாடவிருக்கின்றதென்றும், இவ்விழாவில் தமிழ்நாட்டு மக்கள் பங்குபெற்றுச் சிறப்பிப்பதோடு வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்களும் தக்க முறையில் பங்குகொண்டு சிறப்பிக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டு, குழுவினர் சங்கத்திற்குப் போந்தமை குறித்து நன்றி தெரிவித்துக்கொண்டனர். இறுதியில் சங்க வாழ்த்துக்கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

திருப்பாவை திருவெம்பாவை விழா.

திருப்பாவை, திருவெம்பாவை விழா மார்கழித் திங்கள் 27-ஆம் நாள் (11—1—60) புதன்கிழமை மாலை திருவாளர் தி. அ. விவேகானந்தம் பிள்ளையவர்கள் (மாவட்ட உதவி ஆணையர், அறநிலையப் பாதுகாப்புத்துறை, தஞ்சை.) தலைமையில் கொண்டாடப்பெற்றது. கலியாணசுந்தரம் உயர்நிலைப்பள்ளி வடமொழியாசிரியர் திரு. உ. வே. நா. தாத்தாச்சாரியாரவர்களும், பட்டுக்கோட்டைக் கழக உயர் நிலைப்பள்ளித் தமிழாசிரியர் திரு. தங்கவேலனாரவர்களும் முறையே 'மாலுகந்த மாமகள்' 'திருவெம்பாவை' என்ற தலைப்புக்களின்கீழ் விரிவுரையாற்றினார்கள். உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர், திரு. கே. எம். சுந்தரமவர்கள் வரவேற்றுப் பேசினர்.

விழாத் தலைவர்; தம்முன்னுரையில் இவ்விழாவின் நோக்கம் பற்றி விரித்துரைத்தார்கள். திருவாசகம் பன்னிரு திருமுறைகளில் சிறந்ததென்றும், சிவபெருமான் கையிலுள்ளதென்றும் கூறினர். மேலும் மாணிக்கவாசகர் பாடச் சிவபெருமானே தம்முடைய கையால் வரைந்த பெருமைக் குரியதென மொழிந்தனர். மணிவாசகர் சித்தத்தைச் சிவன்பால் வைத்தவரென்றும், காண்பன யாவும் அவர் கண்கட்குச் சிவமாகவே தோன்றுகின்றனவென்றும் கூறினர். மார்கழியைப் பீடைமாதமென்று கூறுவது பொருந்தாதென்றனர். நம் முகத்தில் விளங்கும் இரு கண்களிலும் இரு பாவைகள் உள்ளன. உடலுறுப்புக்களுள் கண்கள் சிறந்தன. கண்களினும் அவற்றினுள் விளங்கும் பாவைகளிரண்டும் மேலானவை. அம்முறைப்படித் தமிழர்கட்குத் திருப்பாவை, திருவெம்பாவையாய இரண்டும் சிறந்தவையாகுமெனக் குறிப்பிட்டனர்.

திரு. தாத்தாச்சாரியாரவர்கள் திருப்பாவை பற்றிய தம்முடைய உரையில் பல அரிய கருத்துக்களை மொழிந்தனர்.

தமிழ் நூல்கள் பலவற்றிற்குப் பிறப்பிடமான பாண்டியநாடே திருப்பாவையும், திருவெம்பாவையும் தோன்றுதற்கிடமாகும். திருப்பாவைக்குப் பலவகையான பெருமைகளுண்டு. எல்லா ஆழ்வார்களும் ஆண்களாகப் பிறந்து திருமாலைத் தலைவனாகக்கொண்டு வழிபட்டவர்கள். ஆனால் ஆண்டாளோ இயல்பாகவே பெண்ணாகப் பிறந்து திருமாலைத் தலைவனாகக் கொண்டு பெருமையுற்றவர். அன்றியும் சில ஆழ்வார்களின் வாக்குப்படி குறிப்பிட்ட சில வரையறைக் குட்பட்டுள்ளவர்கட்கே திருமால் நெறியை வகுத்துப்போயினர். ஆண்டாள் பாவையில் எல்லாச் சாதியாரும் யாவரும் கலந்து கொள்ள வாய்ப்பளித்திருப்பதோடு, வீடு வீடாய்ச்சென்று அவர்கள் பேசும் மொழியில் கதவைத்தட்டி எழுப்பிக் கூப்பிட்டு திருமால் நெறியில் ஈடுபடச் செய்யும் பெருமை மற்றவருக்கில்லை. 'சங்கத் தமிழ்பாடி', 'கூடியிருந்து குளிர்ந்து' என்று வரும் மொழிகள் பல மக்களும் வேறுபாடறக்கூடி என்ற கருத்தை வலியுறுத்துகின்றமையறியலாம். பலவகையான பாசபந்தங்களோடு கட்டுண்டுகிடக்கும் மனித உயிர், இவ்வகையான பந்தங்களெல்லாமின்றிப் பரமபதத்தில் வீற்றிருக்கும் திருமாலையடையும் நெறியை உலகியலொடு வைத்துக்

தமிழில் தாவரம்.

கு. சீநிவாசன், M. Sc.,
தாவர விரிவுரையாளர், அண்ணாமலைநகர்.

கருவிளம் — கூவிளம் :

இற்றை நாளில் கூறப்படும் விளாமரம் கருவிளம் ஆகும். திருமுருகாற்றுப்படையிலும் (37) சீவகசிந்தாமணியிலும் (232, 1024, 1122) வெள்ளில் என்ற சொல் விளவினைக் குறித்துப் பயிலப்படுகின்றது. 'மணிபூங்கருவிளை' (குறிஞ்-68) என்றதற்கு நீலமணிபோலும் பூக்களையுடைய கருவிளம்பூ, என ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரை கூறினாரெனினும், விளவின்பூ நீலமணி போன்றின்மையின் கருவிளை என்பது கருவிளம் ஆகாது. கருவிளை, செருவிளை என்பன கொடிகள். இவை முறையே கருங்காக்கணம், வெண்காக்கணம் எனப்படும். இவற்றைப் பின்னர்க் கருதுவாம்.

கருவிளமரம் ஏறக்குறைய முப்பது முதல் நாற்பது அடி வரை ஓங்கியும், நன்கு கிளைத்து விரிந்தும் வளரும். இதனைத் தாவரநூலார் பெரோனியா எலிபேன்டம் (Feronia elephantum corr.) என்பர். இது கூவிளம், நரந்தம், எலுமிச்சை, கறிவேப்பிலை முதலியவற்றை உள்ளிட்ட ரூட்டேசி (Rutaceae) என்ற தாவரக்குடும்பத்தின்பாற்படும் பெரோனியா (Feronia)

298-ஆம் பக்கத் தொடர்ச்சி

கூறப்பெற்றதே திருப்பாவையாகும். திருப்பாவை முழுவதும் ஒரு கோவையாகவுள்ளது. ஏலோர், எம்பாவாய், யென்னும் மொழிகளை நீக்கி முதற்பாட்டின் ஈற்றையும் வரும் பாட்டின் முதலையும் இயைத்தால் தொடர்புபட்டுச் செல்லுவதைக்காணலாம். இவ்வாறு பல கருத்துக்களை மொழிந்தனர்.

அடுத்துத் திருவாசகம் பற்றிப்பேசிய தங்கவேலனாரவர்கள் திருவாசகத்தின் பெருமை பற்றியும், சிறப்புப்பற்றியும் நன்கெடுத்து விளக்கினர். வெளிநாட்டுப் பாதிரிமார்களையும் தன்வயத்ததாகச் செய்த திருவாசகத்தின் பெருமையைச் சுட்டினர். சிவப்பிரகாச சுவாமிகள் வேதத்தோடு ஒப்பிட்டுத் திருவாசகத்தின் பெருமையை விளக்கிய பகுதியைக்கூறி விளக்கினர். திருவெம்பாவைப் பாடல்களின் கருத்துச் சிறப்பு முதலிய பல அரிய கருத்துக்களை மொழிந்தனர்.

இறுதியாகச் சங்கத் தலைவரவர்கள் நன்றி கூறுமுகத்தான் சங்கத்தார் இவ்விழாக்கொண்டாடுவதற்கான இயைபினை விளக்கினர். சங்கத்தார் இவ்விழாவைக் கொண்டாட உதவியாகவிருக்கும் அச்சுத கோபாலசாமி நாயுடு அவர்கட்கும், விழாவிற்கலந்துகொண்ட எல்லா அன்பர்கட்கும் நன்றி கூறினர். உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் இடை இடையே திருப்பாவை, திருவெம்பாவைப் பாடல்களைப் பாடினர். இறுதியில் சங்க வாழ்த்துக் கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

என்ற இவ்வினத்தில் (Genus) நான்கு வகைகள் (Species) உள்ளன. இவை தென்னிந்தியா, இலங்கை, மலேயா முதலிய நாடுகளில் வளர்கின்றன. சிற்சிலவிடங்களில் கனிக்காகக் கருவிளம் பயிர் செய்யப்படுகிறது. விளவின் கொழுந்து சிறிது செந்நிறமாகக் கவினுறத்தோன்றும். மகளிர் இதனைக் கிள்ளித் தெறித்து விளையாடுவர் என்பதை,

வெள்ளிற்குறுமுறி கிள்ளுபு தெறியா (திருமு. 37)

என்பதால் அறியலாம். கருவிள இலை பல்லலகுடையது. சிற்றிலைக் காம்புகள் சிறகு போல அகன்றிருக்கும். கணுக் குருத்து (Axillary bud) வலியமுள்ளாக மாறி வளர்ந்திருக்கும். நுனிக் குருத்து பூங்கொத்தாகி, ஆனி ஆடித்திங்களில் சற்று கருநீல நிறமாகப் பூக்கும். நுண்ணிய இப்பூவின் புறவிதழ் (Sepal) ஐந்து விளிம்புகளை உடையது. அகவிதழ்கள் (Petals) ஐந்தும் கருநீல நிறமுடையன. தாதிழைகள் (Stamens) பத்து அல்லது பன்னிரண்டும் தாதுப்பைகளை (Anthers)த் தாங்கி நிற்கும். இவற்றிற்கும் அகவிதழ்களுக்கும் இடையே வட்டமான தேன் சுரப்பி உண்டு. பூவின் நடுவில் கரு (Ovary) முதிர்ந்து வரும். கருவிளம்பூ பிற மகரந்தச் சேர்க்கையால் (Cross-pollination) சூல் முற்றிக் காயாகிப் பழுக்கும். பழத்தின் ஓரு (புறம்) வன்மையுடைமையின் இதனை ஆங்கிலத்தில் உட் ஆப்பிள் (Wood Apple) என வழங்குவர். இதனுடைய வண்ணநொசி எண் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. விளவின் அடிமரம் நல்ல உறுதியும் சற்று மஞ்சள் நிறமுமுடையது. இதன் கனி உடலுக்கு நலந்தருமென்ப.

கூவிள மரமும் ரூட்டேசி (Rutaceae) என்ற இத்தாவரக் குடும்பத்தைச் சார்ந்ததே. தாவர நூலில் இது ஈகிள் மார்மிலோஸ் (Aegle marmelos, Corr.) எனப்படும். ஈகிள் (Aegle) இனத்தில் இருவகை உண்டு. இதன் வண்ணநொசி எண் (Chromosome Number) X=9 என E.K. சானகிஅம்மையார் அறுதியிட்டனர். ஆசிரியர் நச்சினார்க்கினியர் பெருங்குறிஞ்சியில் கூவிளம் (65) என்புழி வில்லப்பூ என்றனர். இது இற்றைஞான்று வில்வமெனப்படுகின்றது. இதனை உரியா மொழியில் பில்வ எனவும், தெலுங்கில் பில்வமு எனவும், கன்னடத்தில் பில்வா எனவும், மலையாளத்தில் கூவளம் எனவுங் கூறுப. பழந்தமிழில், கூவிள மலரை யிடையிட்டுக் கட்டிய கண்ணியை உடையவன்,

கூவிளந்ததைந்த கண்ணியன் (நற். 119) எனவும்,

வில்வ மாலைசூடிய எழினி,

கூவிளங்கண்ணிக் கொடும்பூண் எழினி (நற். 158) எனவும்,

கூவிள விறகைப் பகைவர் தலையாலாகிய அடுப்பிலிடல்,

பொருந்தாத் தெவ்வர் அரிந்ததலை அடுப்பின்
கூவிள விறகின் ஆக்குவரி நுடங்கல் (புற. 372)

எனவும் கூவிளம் வந்தமை காணலாம். அன்றி, கூதாளி எனப்படும் கூதளமும், கூவிரம்பு எனப்படும் கூவிரமும் கூவிளமாகிய வில்வமன்று. கூவிள மரம் ஆங்கிலத்தில் பீல் மரம் (Beal Tree) எனப்படுகின்றது. இதற்கும் கருவிளவிற்போலக் கணுக்குறுத்து முள்ளாகி மாறியிருக்கும். கருவிளம்போலக் கூவிளமரம் ஓங்கி வளர்வதல்லால் அகன்று பருத்தலில்லை. கூவிள இலை மூன்றங் குலமுடையது. "யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை" என்றதற்கியைய இவ்விலை கடவுள் வழிபாட்டிற்குச் சிறந்ததென்ப. இறைவனை அருவமாகவும் வழிபடுதற்குத் தில்லைச் சிற்றம்பலத்தின்கண் அகவழிபாட்டுக் குறியிடத்தே (சிதம்பர ரகசியம்) தங்கத்தாலாகிய வில்வ இலை மாலை சூட்டப்பெற்றிருத்தல் ஈண்டு கருதுதற்குரியது. வில்வப்பூ நான்கு அல்லது ஐந்து புறவிதழ்களையும், அகவிதழ்களையும் முப்பது முதல் அறுபது தாதிழைகளையும், எட்டு முதல் இருபது அறைகளையுடைய கருவினையும் உடையது. சூல் முதிர்ந்து, காய்த்துப் பழுத்த இதன் பழம் கருவிளங்கனியினும் நீண்டும் பருத்தும் இருக்கும். கூவிளங்கனி வயிற்றுளைவிற்கு நல்ல மருந்தாகும்.

இனி, கருவிளம் கூவிளம் என்பன ஈரசை, மூவசை, நான்கசைச் சீர்களில் பயிலப்படுமாறு காண்பாம்.

நிரை நிரை—கருவிளம் நேர் நிரை—கூவிளம் இவ்வீரசைச்சீர், விளச்சீர் எனப்படும். நிரை நிரை நேர்—கருவிளங்காய் நேர் நிரை நேர்—கூவிளங்காய் இவை காய்ச்சீர் எனவும், வெண்பா உரிச்சீர் எனவும் படும். நிரை நிரை நிரை—கருவிளங்கனி நேர் நிரை நிரை—கூவிளங்கனி இவை கனிச்சீர் எனவும், வஞ்சி உரிச்சீர் எனவும் படும்.

நிரை நிரை நேர் நேர்—கருவிளந்தண்பூ
நேர் நிரை நேர் நேர்—கூவிளந்தண்பூ
நிரை நிரை நிரை நேர்—கருவிளநறும்பூ
நேர் நிரை நிரை நேர்—கூவிளநறும்பூ
நிரை நிரை நேர் நிரை—கருவிளந்தண்ணிழல்
நேர் நிரை நேர் நிரை—கூவிளந்தண்ணிழல்
நிரை நிரை நிரை நிரை—கருவிளநறுநிழல்
நேர் நிரை நிரை நிரை—கூவிளநறுநிழல்

இவை நான்கசைச் சீர்க்குரிய வாய்பாடுகளாகும். கருவிளமும், கூவிளமும் மரமாயிருந்து நிழல் தருதல்போலக் கருவிளையும், கூதளமும் கொடியாயிருத்தலின், தண்ணிழலாதல் நறுநிழலாதல் தருமாறில்லை. ஆகலின் கருவிளம் கருவிளையன்று; கூவிளம் கூதளமன்று.

திருக்கோவையார்

உரைப்பிழையும் திருத்தமும்

(பண்டித—வித்துவான். தி. சங்குப்புலவர்)

கொளு—புணர்த்துடன் வரூஉம் புரவல னொருபால்
அணங்கமர் கோதையை யாராய்ந்தது.

(எ—து) வேதியரை வினவி அதன் வழியாகச் செவிலி, உம்மைக்கண்டு என்னால் தேடப்படுவோர் மீண்டாரென் றெண்ணினேன், அது நிற்க, இவ்வாறு நும்மையொத்த ஒழுக்கமுடையாராய் இருவரைப்போகக் கண்டீரோவெனப் புணர்ந்துடன் வரும் ஒருபாற் கொண்ட தெய்வ மகளொப் பாளைப்பொருந்தி வினவியது.

(பா) மீண்டா ரெனவுவந் தேன்கண்டு நும்மையிம் மேதகவே
பூண்டா ரிருவர்முன் போயின ரேபுலி யூரெனை நின்
ருண்டா னருவரை யாளியன் னானைக்கண் டேனயலே
தூண்டா விளக்கனை யாயென்னை யோவன்னை சொல்லியதே.

(இ—ள்) நும்மை கண்டு மீண்டாரென உவந்தேன்-உம்மைக் கண்டு என்னாற் றேடப்படுகின்றவர் மீண்டாரெனக் கருதி மகிழ்ந்தேன்,-இ மேதகவே பூண்டார் இருவர் முன்போயினரே-(நும்மோடொத்த) இவ்வொழுக்கத்தையே பூண்டாரிருவர் முன்னேபோயினரோ (உரைமின்). எ-று — புலியூர் எனை நின்று ஆண்டான் அருவரை ஆளி அன்னானை கண்டேன்—புலியூர்க்கண் ணென்னை (ஒரு பொருளாகமதித்து) நின்ருண்டவனது (கிட்டுதற்கு) அரிய மலையின்கண் ஆளியை யொப்பானை (யான்) கண்டேன்,—தூண்டா விளக்கு அனையாய் - தூண்டவேண்டா விளக்கையொப்பாய்! — அயல்அன்னை சொல்லியது என்னை - அவனது அயல் அன்னை சொல்லியது யாது? (அதனையவட்குச் சொல்வாயாக.) எ—று மெய்ப்பாடு-அழுகையைச் சார்ந்தவுவகை பயன்-தலைமகளைக்காண்டல்.

அருவரைக்கட் கண்டேனெனக் கூட்டினுமமையும். ஆளியன்ன னென்றதனால் நின்மகட்கு வருவதோ ரிடையூறில்லையெனக் கூறினனும். மணிவிளக்கெனினுமமையும். (௪௬௬)

மேற்காட்டியபடி "திருக்கோவையார்" என்ற புத்தகத்தில் உரை வரையப்பட்டுள்ளது. துறையில் வழுவில்லை. கொளுவில் வழுவில்லை. கொளுவின் விளக்கவுரையிலும் பிழையில்லை. கவிக்கு வரைந்துள்ள சொற்பொருளிலும் விளக்கவுரையிலும் பிழையுள்ளன. ஏட்டிலிருந்து அச்சுக்குக் கொண்டு வரும்போது நேர்ந்த பிழைகள் அவைகள் என்பது என்கருத்து. அதற்குக்காரணம் அடியில் விளக்குகின்றேன்.

இவ்வுரையின்படி பொருளை ஆய்ந்தால், செவிலி, புணர்ந்துடன் வரும் புரவலனையும் அவனது ஒருபால் வரும் அணங்கமர் கோதையையும் கண்டு நும்மையொத்த ஒழுக்கம் பூண்ட இருவர் உங்கட்கு முன்னே சென்றனரோ? என வினவியதாகவும், அவ் வினாவிற்கு விடையாக அப்புரவலன் ஆளியன்னானைக் கண்டேன் என்று விடைகூறியதாகவும், பின்னும் அவனே தன் அயலில் நின்ற தன்காதலியை "தூண்டா விளக்கனையாய்" என்று விளித்து என்னையோ அன்னை சொல்லியதே என்று வினவினான் என்றும், அவ்வினாவால் "நீ தான் அவளிடம் உரையாடியிருந்தாய்; அவள் கூறியது உனக்குத்தான் தெரியும்; எனக்குத் தெரியாது ஆதலால் அதனை யவட்குச் சொல்வாயாக" என்னும் குறிப்புத்தோன்றுகிறது என்றும் நாம் அறிகின்றோம்.

அகப்பொருள் அமைந்த செய்யுட்கள் எல்லாம் ஒருவர் கூற்றாக இருத்தல்வேண்டும் இருவர் கூற்றாகவோ பலர் கூற்றாகவோ உரை யாடலாயமைந்திருந்தால் அது வழுவாம். திணையே கைகோள் கூற்றே கேட்போர் என்ற "அகப்பொருளிலக்கணச் சூத்திரத்தில்" இன்னார் கூற்று என ஒரு கவியை ஆய்ந்து கூறவேண்டும் என்பது விதியாக இருப்பது தெரிந்ததே. அன்றியும் அகப்பொருட்குரிய முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை ஆகிய மூன்று பாட்டிலும், நற்றிணை, குறுந்தொகை ஐங்குறுநூறு, அகநானூறு ஆகிய தொகை நூல்களிலும், ஐத்திணையம்பது முதலிய கீழ்க் கணக்கு நூல்களிலும், கல்லாடம என்ற நூலினும் பின்னர்த்தோன் றிய தஞ்சைவாணன் கோவை, குலோத்துங்க சோழன் கோவை முதலிய கோவை நூல்களினும் உரையாடல் வந்துள்ள பாடல்கள் ஒன்றேனும் காண்கிலேம். ஆதலால் உரையிற் பிழைகள் உள்ளன என்றே துணிந்தேன்.

கலித்தொகையிலும், பரிபாடலிலும் வினா விடை உரையாடல் வந்துள்ளன. அவற்றில் உள்ள பாடல் அனைத்தும் அகப்பொருட் டுறையமைந்துள்ளனவல்ல, கைக்கிளையும் பெருந்திணையும் வந் திருப்பதால் அகப்புறத்தைச்சார்ந்த துறையமைந்த பாடலும் உள் ளன. நச்சினார்க்கினியர் உரையில் இது "அகப்புறம்" என்று சில பாடல்களின் விளக்கத்திற் கூறுவதாலும், ஒத்த அன்புடைய ஒருவனும் ஒருத்தியும் உரையாடாது குறளனும் கூனியும் போன்ற சிலர் உரையாடல் அமைந்திருப்பதாலும் மடலேறுதல் போன்ற அகப்பொருட்குப் பொருத்தமில்லாத துறைகள் வந்திருக்கக் காண்ப தாலும் அது துணியப்படும். எனவே உரையாடல் அகப்பொருட் டுறைகளில் வந்தால் வழுவென்றே களையவேண்டும். அகப் பொருட்டுறையமைந்த நூல்கள் எல்லாவற்றிலும் இதுகாறும் இல் லாத உரையாடல் திருக்கோவையாரில் மட்டும் எவ்வாறு வரும். மணிவாசகர் பாடிய 399 பாடலிலும் வராதது இப்பாடல் ஒன்றில் மட்டும் வந்துள்ளது எனக்கூறுவது பொருத்தம் ஆகுமா? ஆதலால் அதனை ஆய்ந்து திருத்திச் செவிலி கூற்றாகவே உரையைத்

திருத்திப்படித்துப் பொருள் விளக்குவது தான் அறிஞர் கடமையாம். நான் இதுகாறும் ஆய்ந்த திருத்தத்தை அடியில் வரைகின்றேன். திருத்தத்தின் பொருளும் விளக்குகின்றேன். பொருத்தமின்றே னில் மறுத்துக்கூறி விளக்குமாறு வேண்டுகின்றேன்.

	பிழை	திருத்தம்
(1)	(உரை மின்)	(உரை—)
(2)	அதனையவட்கு	அதனையெனக்கு
(3)	நின்மகட்கு	நினக்கு
(4)	கூறினனும்	கூறினளாம்

மேற்காட்டிய வுரையில் இந்நான்கு திருத்தமுஞ் செய்தால் செவிலி கூற்றாகவே பொருளை யமைத்துக்கொள்ளலாம். பொருளும் முன்னையினும் சிறந்து தோன்றும். கொளுவின் விளக்கம், புணர்ந்துடன் வருஉம் புரவலன் ஒருபாற்கொண்ட தெய்வமகளொப்பாளைப் பொருந்தி வினவியது'' என்று இருப்பதாற் புணர்ந்துடன் வந்த இருவரிற் பெண்மகளையே செவிலி வினவினள் என்பது தானே போதரும். இதற்குச்சான்றாக அம்பிகாபதி கோவை 406 எண் "பைந்தார் விடலை" என்ற கவியைக்காண்க. அது பின்வரையப் பட்டுள்ளது.

புணர்ந்துடன் வந்தவர்களில் பெண் மகளை மட்டும் தனித்து எவ்வாறு வினவ இயலும்? இருவரும் பிரியாது ஒருவருடனொருவர் நெருங்கி உரையாடிக்கொண்டு பாலைவனத்தில் வருவது தானே இயற்கையாகும். தலைமகளைவிட்டுத் தலைவன் பிரிவதற்குக்காரணம் யாது எனிற் கூறுவல் சேய்மையில் வரப்பார்த்தாள் செவிலி இருவரும் நெருங்கி வருவது கண்டாள். அண்மையில் வர வர ஆடவன் முந்தினன்; ஆட்டி பின் வரக்கண்டாள். செவிலியை சேய்மையிற் கண்டபோதே முன்னும் பின்னுமாக வரமுயன்றனர் எனக்கோடல் வேண்டும். களவில் வருவோர் இவர்கள்; வழியில் எவரைக்கண்டாலும் ஒருவரையொருவர் அறியாதவர் போலப்போவதற்குத்தானே முயல்வர், வழியில் வருபவர் தலைவியையோ தலைவனையோ அறிந்து பழகியவராக இருத்தலுங் கூடும் அன்றோ? இவர் யார்? என இருவரில் ஒருவரைப் பழகியவர் வினவில் விடை கூற இயலாது விழிப்பரன்றே. முன்னும் பின்னுமாகப் போய்விட்டால்'' யான் அவளையறியேன் என்று தலைவன் கூறிவிடுவன்; தலைவியும் அங்ஙனமே கூறுவதற்கு இயலும் இக்காரணத்தால் இருவரும் செவிலியைக்கண்டவுடனே பிரியத்தொடங்கினர் ஆடவன் முந்தினன் ஆட்டி பின் வந்தாள். அவ்வாறு பின்வந்த பெண்மகளை நோக்கியே செவிலி வினவினள். சேய்மையில் நும்மிருவரையும் கண்டேன். அப்போது என்னாற் றேடப்படுகின்ற என் மகளும் அவள் காதலனும் மீண்டு வருகின்றார்கள் என்று எண்ணி மகிழ்ந்தேன். அன்மையில் வரும்போது அயலாராக நும்மிருவரையும் அறிந்தேன்.

உன் காதலன் முன்னே செல்கின்ருன்; ஆளியன்னுன் அவன்; அவனைக் கண்டேன். நான் அவனிடத்து ஒன்றும் வினவிலன். ஏன்; நீ பின் வருகின்ருய் என்பதை யானறிவேன்; அன்றியும் என் மகள் அவனிடத்தில் நின்று உரையாடாள் என்பதும் எனக்குத் தெரியும். உன்னிடத்தில் அவள் உரையாடியிருப்பள்; இருவரும் ஒத்த ஒழுக்கமுடையவர்; கலந்து பேசிச்சென்றிருப்பள்; ஆதலால் உன்னிடத்தில் வினவினேன். அவள் எங்குச் செல்கின்ருள்; மீண்டு வருவாளா? என்பதுபற்றி யான் அறியவிரும்புகிறேன். அவள் உன்னிடம் ஏதேனும் கூறியதிருந்தால் அதனை எனக்குக் கூறுவா யாக என்று வினவினள். இவ்வாறு செவிலி கூற்ருகப்பொருத்தித் திருத்திய உரையைக்காண்க.

உரை திருத்தம்.

(சொற்பொருள்)

நும்மை கண்டு மீண்டாரென உவந்தேன்—உம்மைக் கண்டு என்ஞற் றேடப்படுகின்றவர் மீண்டோரெனக் கருதி மகிழ்ந்தேன், இமேதகவே பூண்டார் இருவர் முன் போயினரே–(நும்மோடொத்த இவ்வொழுக்கத்தையே பூண்டாரிருவர் முன்னே போயினரோ (உரை) எ–று–புலியூர் எனை நின்று ஆண்டான் அருவரை ஆளி அன்னுனைக் கண்டேன்—புலியூர்க்கண்ணென்னை (ஒருபொருளாக மதித்து) நின்ருண்டவனது (கிட்டுதற்கு) அரிய மலையின்கண் ஆளியை ஒப்பானை (யான்) கண்டேன்,–தூண்டா விளக்கு அனையாய் -தூண்டா விளக்கை யொப்பாய்! அயல்அன்னை சொல்லியது என்னை -அவனது அயல்அன்னை சொல்லியது யாது? (அதனை யெனக்குச் சொல்வாயாக.) எ–று. மெய்ப்பாடு அழுகையைச் சார்ந்த உவகை. பயன்—தலைமகனைக் காண்டல்.

அருவரைக்கட் கண்டேனெனக் கூட்டினுமமையும். ஆளியன்னு னென்றதனுல் நினக்கு வருவதோரிடையூறில்லையெனக் கூறினு ளாம். மணிவிளக்கெனினு மமையும்.

(1) மின் என்பதை நீக்கியது (2) யவட்கு என்பதை எனக்கு என்று மாற்றியது (3) நின்மகட்கு என்பதை நினக்கு எனமாற்றி யது (4) கூறினுனும் என்பதைக் கூறினுளாம் என மாற்றியது. இந் நான்கு பிழைகள்தாம் திருத்தப்பட்டன. உரை பழையபடியே இருக்கிறது. ஆய்ந்து காண்க.

அம்பிகாபதி கோவை 406 எண் செய்யுள்

செவிலி கலந்துடன் வருவோர்க் கண்டு கேட்டல்.

பைந்தார் விடலையும் நீயுந்தகவிப் பரிசெதிரே
வந்தார் சிலருள ரோமக ளேவண்ட லாடுமந்தண்
சந்தார் தடமுலை யாயமுந் தாயருந் தான்வளர்த்த
செந்தார் மழலைக் கிளியுமென் போலின்று தேடவைத்தே.

வரலாறு கண்ட வரதட்சணை.

வித்துவான், சி. கோவிந்தராசன்,
விரிவுரையாளர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

வரதட்சணை என்னும் ஆரிய சமயத் திருமணப் பரிச வழக்கம் பண்டுதொட்டுப் பார்ப்பனரிடையே இருந்து வருவதாகும். இது, மணமகள் சுற்றத்தார் பொன்னெடு பெண்ணைக் கொடுப்பதும், மணமகன் சுற்றத்தார் பொன் பெற்றுப் பின் பெண்ணைக் கொள்வதுமாக இருவகை முறையில் நிகழ்ந்திருக்கிறது. இக்கொடிய வழக்கத்தை ஆரியரல்லாத பிறரும் காலப்போக்கில் கைக்கொண்டுள்ளனரென்பது நாடறிந்ததேயாம்.

இன்றைய இந்திய அரசாங்கம் மேற்குறித்த திருமணப் பரிச வழக்கத்தின் சார்புடையதாக இன்று மலிந்து நிற்கும் வரதட்சணையை நீக்கும் பொருட்டாக எடுத்துக்கொண்டுள்ள முயற்சிக்கு நாட்டில் மிக்க ஆதரவு கிடைத்துள்ளது. இக்கொடிய வழக்கத்தால் வாழ்க்கைப் பாதையை மாற்றியமைத்து அதனுல் உயர்ந்த குடும்பங்களைவிட குலைந்த குடும்பங்கள் பலவாம். உண்மைக் காதலுக்கும் இடையே சுவர்போல் நின்றதும் நிற்பதும் இதுவேயாகும். இத்தகைய சமயச் சார்புடைய சமுதாய இழுக்கை, இவ்விருபதாம் நூற்ருண்டில்தான் அரசியலார் நீக்க முயன்றிருக்கிறுர்கள் என்பது பொதுமக்களுடைய முடிந்த கருத்தாகலாம். ஆனல், இன்றைக்கு ஐந்நூற்றுண்டுகட்கு முன்னர் தென்னுட்டில் வலிமையுடன் திகழ்ந்த விசயநகரப் பேரரசில் இவ்வழக்கம் கடியப்பட்டுள்ள செய்தியை, வேலூரையடுத்த திருவிரிஞ்சிபுரத்திலுள்ள திருமால் கோயிற் கல்வெட்டுக்களுள் ஒன்று தெளிவாகக் கூறுகிறது.

விசயநகரப் பேரரசின் வழிவந்த அரசருள், மூன்றும் புக்கருடைய மகன் இரண்டாம் தேவராயர் எனப்படும் தேவமகாராயர் ஒருவராவர். இவர் கி. பி. 1422-ல் அரசுரிமை பெற்று, 1446-ஆம் ஆண்டு மே திங்கள் இருபத்து நான்காம் நாள் வரையில் ஆட்சி புரிந்திருக்கிருரென்பதை வரலாறு கண்டுளது. இப்பேரரசருடைய ஆட்சி, தெற்கே தஞ்சை மாவட்ட அளவில் பரவி இருந்திருக்கிறது.

இம்மன்னர் ஒரு குலத்துக்கொரு நீதிகொண்டு ஆட்சி புரியாமல் நடுநிலைமை மிக்கவராக இருந்திருக்கிருரென்பதை, தென்கயிலாயமாகிய தில்லைச் சிற்றம்பலத்துக்குரியார் அரசாங்க அதிகாரிகளின் துணையை மறைவாகப் பெற்று குடிகளைத் துன்புறுத்தி வசூலித்த வரிவகைகள், முறையானவையல்லவென்று குடிகள் முறையிட, அம்முறையீட்டை ஆராய்ந்து, அப்புதிய வரிப்பளுவை விலக்கியுள்ளார்' என்னும் செய்தியைக் கூறும் ஷை தில்லைக் கோயிற் கல்வெட்டுக்களால் நன்கறியலாம்.

விசயநகரப் பேரரசர்கள் மறையவரது வழிநின்று ஆட்சி செலுத்தியவரென்று கூறும் நிலைமை ஒருவாறு வரலாற்றுள் இடம்பெறினும், அவர்கள் தஞ்சை நாயக்கர் ஆட்சியில் நிகழ்ந்ததைப்போல் ஒரு சார்பு பற்றி ஆட்சி செலுத்தவில்லை என்னும் கருத்தும் இதுபோன்ற நீதிமுறைமைகளைக் கூறும் அவர்களுடைய கல்வெட்டுக்களால் புலனாகிறது.

இத்தகைய மேம்பாடுடைய இவ்விரண்டாம் தேவராயரின் மூன்றாம் ஆட்சியாண்டில் இவரது அதிகாரம் பெற்ற முறைமையோடு, திருவிரிஞ்சிபுரத்திலிருந்த "அஸேஷவித்ய மகாஜனங்கள், அக்ர புஷ்கரணி கோபிநாதன்" சன்னிதியிலே கூட்டங்கூடி, அறநிலையத் தீர்ப்புப் பத்திரம் செய்து, மேற்குறித்த திருமணப் பரிசு ஒழிப்பு செய்திருக்கிறார்கள். அப்பத்திரத்தின் கட்டுப்பாட்டை எவரேனும் மீறினால், சாதி விலக்குடன் அரச தண்டமும் பெறுவரென்னும் குறிப்பும் கல்வெட்டிற் காணப்படுகிறது. எனவே பார்ப்பனரும் அவரைச் சார்ந்த பிறரும் பெருமையுடன் பேணிவந்த சமுதாயக் கொடுமைகளுள் ஒன்றாய வரதட்சணை, நாயக்கருடைய ஆட்சிக் காலத்திலேயே கண்டிக்கப்பட்டுள்ளதென்னும் உண்மை புலனாகிறது.

கல்வெட்டு :—

ஸ்ரீமன் மஹா இராஜாதிராஜ பரமேஸ்வரரான ஸ்ரீ வீரப்பிரதாப தேவராய மஹாராஜ பிரிதிவிராஜ்யம் பண்ணி அருளாநின்ற ஸகாப்தம் 1347 ன் மேல் செல்லாநின்ற விஸ்வாவஸு வருஷம் பங்குனி மீ ௩ க்கு ஷஷ்டியும் புதன்கிழமையும் பெற்ற அநிழத்து நாள் படைவீட்டு இராஜ்யத்து அஸெஷவித்ய மஹாஜநங்களும் அக்கரபுஷ்கரணி கோபிநாத(ன்) சந்நிதியிலெ தர்மஸ்ஸ்தாபந ஸமயபத்ரம் பண்ணிக் குடுத்தபடி இற்றை நாள் முதலாக இந்தப் படைவீட்டு ராஜ்யத்து பிராம்ணரில் கன்னடியர், தமிழர், தெலுங்கர் இலாடர் முதலான அஸெஷ கோத்ரத்து அஸெஷ ஸூத்ரத்தில் அஸெஷஸாகைவ யிலவர்களும் விவாஹம் பண்ணுமிடத்து கந்யாதானமாக விவாஹம் பண்ணக்கடவராகவும். கந்யாதானம் பண்ணாமல் பொன் வாங்கிப் பெண் குடுத்தால், பொன் குடுத்து விவாஹம் பண்ணினால் இராஜ தண்டத்துக்கும் உட்பட்டு பிராம்ணத்துக்கும் புறம்பாகக் கடவாரென்று பண்ணின தர்மஸ்தாபன சமயபத்ரம். இப்படிக்கு

அஸெஷவித்ய மஹாஜனங்கள் எழுத்து.

(S. I. I. Vol-I, page 83)

மார்கழி இதழ் 279 ஆம் பக்கத் தொடர்ச்சி.

சிற்றிலக்கியம்: 2.

ஆற்றுப்படை.

மது. ச. விமலானந்தம், எம்.ஏ.,
தமிழ் விரிவுரையாளர், சரபோசி அரசர் கல்லூரி, தஞ்சை.

நாயின் நிலையே இஃதென்றால் இனி அவ் இல்லின் நிலையை, இல்லத்தலைவியின் நிலையைக் கூறவும் வேண்டுங்கொல்? அவளும் பசியால் வாடி மெலிந்து நலிந்துளாள். பசி போக்கக் குப்பையில் முளைத்திருந்த வேளைக் கீரையைப் பறித்துவந்து வேகவைத்தாள். அதைச் சுவைப்படுத்தற்கு உப்பு கூட இல்லை! என் செய்வாள்! உப்பின்றி வேகவைத்த கீரையோ சிறிது; உண்ணவிருக்கும் குடும்பமோ பெரிது. எல்லோரும் உண்ண வருகின்றார்கள் என்ன தான் சாப்பிட்டார்கள்? (வறுமையிலும் பகிர்ந்து உண்டு பல்லுயிர் ஓம்பும் பண்புதான் உண்டே!). உப்பில்லாக் கீரை யுணவை உண்ணும் நிலையை எவரேனும் கண்டுவிட்டால் இகழ்வரே என்றெண்ணி நாணிக் கதவடைத்தாள் தலைவி. வறுமையிலும் மானம் விளங்கும் மாட்சி காண்க. இந்த வறுமைச் சித்திரத்தை விளக்கும் பாடல் இதோ:

> திறவாக் கண்ண சாய்செவிக் குருளை
> கறவாப் பான்முலை கவர்தல் நோனது
> புனிற்றுநாய் குரைக்கும் புல்லென் அட்டில்
> காழ்சோர் முதுசுவர்க் கணச்சிதல் அரித்த
> பூழி பூத்த புழற்கா ளாம்பி
> ஒல்குபசி உழந்த ஒடுங்குநுண் மருங்குல்
> வளைக்கைக் கிணைமகள் வள்ளுகிர்க் குறைத்த
> குப்பை வேளை உப்பிலி வெந்ததை
> மடவோர் காட்சி நாணிக் கடையடைத்(து)
> இரும்பேர் ஒக்கலொ(டு) ஒருங்குடன் மிசையும்
> அழிபசி வருத்தம்
>
> (சிறுபாண் 130—140)

இதுகாறும் இரவலர் இயல்பும் ஏற்றமும் கண்டோம். இனிப் புரவலர் பண்பும் பெற்றியும் காண்பாம்:

ஆற்றுப்படை இலக்கியங்களைப் படித்து முடித்தபின் நம் மனத்தின்கண் ஓர் ஐயப்பாடு அரும்புகின்றது. கவரிமாவன்ன கலைஞர்களின் மானவுணர்வு சிறந்ததா? அல்லது அன்னாரின் மானத்தைக் காப்பதில் காவலர்க்கு இருந்த கடமை யுணர்வு சிறந்ததா? இரண்டிலும் எது விஞ்சி நிற்கின்றது? என்பதே அவ் ஐயம். எந்த ஆற்றுப்படையிலும் காவலர் அனைவரும் வாடி மெலிந்து தம்மை நாடி

வரும் கலைஞர்களுக்குப் பசி தீர உணவோ, பருகி மகிழத் தேனே பாலோ முதற்கண் தருவதாகக் காணோம். வறுமையை வெளிப் படுத்தி நிற்கும் கந்தல் துணியைக் களைந்து புத்தாடைகளைத் தருவதையே முதற்கடமையாகக் கொள்ளக்காண்கிறோம். ஆற்றுப்படை ஆசிரியர்களும் அறுசுவை உணவையோ, அருந்தி மகிழும் தேனையோ பாலையோ கூறுது, கந்தல் களைந்து கவர்ச்சிமிகு பட்டாடை நல்குவதையே முதற்கண் கூறுகின்றனர்.

பாசி வேரின் மாசொடு குறைந்த
துன்னல் சிதாஅர் நீக்கி
(பொருநர், 153—54)

... ... நின்னரைப்
பாசு அன்ன சிதர்வை நீக்கி
(பெரும்பாண்-467—68)

இதனை எண்ண எண்ண இனிக்கின்றதன்றோ? இரவலரின் மானவுணர்வை அறிந்து உணர்ந்து அதற்கேற்ப ஒழுகும் புரவலரின் அறிவு ஒட்பம் உயர்வுடைத்து. கலைஞர்கள் வாயுணர்வின் மாக்கள் அல்லர்; எனவே வயிறுபுடைக்க உண்ணுதலையோ, வாய் இனிக்கப்பருகுவதையோ விரும்பார். நாம் எங்கே? நம் வள்ளல்கள் எங்கே? என்று எண்ணித்தயங்கும் அவர்களுடைய கால்கள்; வேறுபாடு கண்டு மாறுபாடு கொள்ளும் மனம்; வள்ளலின் செல்வச்சிறப்பும் தம்வறுமை வாட்டமும் கண்டு வெதும்பும் தமிழ் நெஞ்சம். இதற்கெல்லாம் காரணம் உடைவேறுபாடு! உடைநிலை உள்ளத்தைக் கலக்குமன்றோ? எனவே தான் இவ் ஏற்றத்தாழ்வினை நீக்க வள்ளல்கள் விழைகின்றனராம். அதுவும் எப்படி? சாதாரண புதிய ஆடைகளைக்கொடுத்தல்ல.

நோக்குநுழை கல்லா நுண்மைய பூக்கனிந்து
அரவுரி அன்ன அறுவை நல்கி ......
தூய; கொட்டைக் கரைய பட்டுடை நல்கி
(பொருநர் 82—83; 155)

மாசில்; காம்புசொலித் தன்ன அறுவை உடீஇ
(சிறுபாண் 236)

ஆவி அன்ன அவிர்நூற் கலிங்கம்
'இரும்பேர் ஒக்கலொடு ஒருங்குடன்' உடீஇ
(பெரும்பாண் 469—70)

இழைமருங்கு அறியா நுழைநூல் கலிங்கம்
எள்ளறு சிறப்பின் வெள்ளரைக் கொளீஇ
(கூத்தர்-561—62)

விலைமதிக்க ஒண்ணுத உயர்ந்த ஆடைகளைத்—தாங்கள் அணிவது போன்ற ஆடைகளை இரவலர்க்கு மட்டுமல்லாது, இரவலரோடு வந்தோர் அனைவர்க்கும் (இரும் பேரொக்கலொடு ஒருங்குடன் உடீஇ — பெரும்பாண் 470) அளித்து அணியச்செய்கின்றனராம்.

அன்றியும் இரவலர் அனைவரையும் துவரத்தழுவி இன்புற விழைகின்றதாம் புரவலர் உள்ளம். எனவே தான் தழுவுதற்கேற்ப கலைஞர்களுக்குத் தம் நிறையும் நிலையும் அளித்து அகமகிழ்கின்றன ராம் வள்ளல்கள். இரக்கவரும் இரவலரை இன்புறத்தழுவி மகிழ விழையும் வள்ளல் உள்ளத்தின் உயர்வை என்னென்பது?

கேளிர் போலக் கேள்கொளல் வேண்டி
(சிறுபாண் 74)

நில்லா வுலகத்து நிலைமை தூக்கி
அந்நிலை யணுகல் வேண்டி
(பெரும்பாண் 466—67)

இவ்வளவும் இரவலர் எதிருற்றபோதே நடக்கின்றதாம்! இரவலரை யாழ் இசைக்கவோ, வாய்திறந்து வந்த செய்தியைக் கூடக் கூறவோ விரும்புவதில்லையாம். வந்ததும் வராததுமாக வறுமைக்கு அறிகுறியாம் கந்தலாடையை நீக்கிப் பட்டுடை நல்கு கின்றனராம். இதனை

ஒன்றியான் பெட்டா வளவையின்......
நும்கையது கேளா வளவை ஒய்யெனப்
(பொருநர் 73, 152)

நீசில மொழியா அளவை......
(சிறுபாண் 152)

நின்னிலை தெரியா வளவை அந்நிலை
(பெரும்பாண் 464)

சென்றது நொடியவும் விடாஅன் நசைதர
வந்தது சாலும் வருத்தமும் பெரிதென
(கூத்தர் 545—46)

என வரும் அடிகளால் அறிக. 'கரப்பவர்க்கு யாங்கொளிக்குங் கொல்லோ இரப்பவர் சொல்லாடப் போஒம் உயிர்' என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கு விளக்கம் தரும் இவ்வள்ளல்களை எண்ணுந் தொறும் இறும்பூது எய்துகின்றோம். இல்லையா?

இத்துணைச் செயலும் நம்மை நாடி வந்தனரே என்ற வேண்டா விருப்பொடு செய்வதில்லையாம். அகமகிழ ஆர்வத்தோடு செய்கின்றனராம்.

பருகு வன்ன வருகா நோக்கமோடு
உருகு பாவைபோல் என்புகுளிர் கொளிஇ;
(பொருநர் 77-78)

அகறி ரோவெம் ஆயம் விட்டெனச்
சிரறிய வன்போற் செயிர்த்த நோக்கமொடு;
(பொரு 123-24)

பழுதின்று, ஈற்று விருப்பிற் போற்றுபு நோக்கி
(பொருநர் 150-51)

பரந்திடங் கொடுக்கும் விசும்புதோய் உள்ளமொடு
நயந்தினிர் சென்ற நும்மினுந் தான்பெரிது
உவந்த வுள்ளமோடு அமர்ந்தினிது நோக்கி

(கூத்தர் 558-60)

மோப்பக் குழையும் அனிச்ச மலரினும் மெல்லிய மனம் படைத்த கலைஞர்தம் மனம் மகிழ முகனமர்ந்து இனிது நோக்கி இனியன செய்யும் காவலர்தம் கருணையுள்ளத்தை—அருள் நலத்தை எண்ண எண்ண இன்பம் பொங்குகின்றது. கலைஞரிடம் காணும் அன்பை விட காவலர் காட்டும் அன்பு மிகமிக உயர்ந்து காணப்படுகிறது. கலைஞரைக் கண்டு கசிந்துருகிக் கண்ணீர் மல்கும் காவலர்தம் கருணை மாட்சியே மாட்சி!

வறுமைத் தோற்றம் நீக்கியமை போன்றே! ஆனினங் கலித்த அதர்பல கடந்து, மானினங் கலித்த மலைபின் ஒழிய, மீனினங் கலித்த துறைபல நீந்தி உள்ளிவந்த' இரவலர் வாட்டம் தீர அறுசுவை உண்டி தந்து உள்ளம் உருகுவராம்; கலைஞர்கள் உண்டு களிக்கத் தாம் உண்டு களிப்பாராம் காவலர்கள். தானும் இரவலரோடு இருந்து நல்ல உணவை எல்லோரும் விரும்பி உண்ணுமாறு உண்பித்து மகிழ்வாராம்

விரும்புவன பேணி
ஆனா விருப்பிற் றான்நின் றூட்டி

(சிறுபாண் 244-45)

மகமுறை மகமுறை நோக்கி முகனமர்ந்து
ஆனா விருப்பிற் றான்நின் றூட்டி

(பெரும்பாண் 478-79)

இத்தகைய தகைசால் அன்பு தலைநாள் மட்டும் இருப்பதாக எண்ண வேண்டா. பண்புடையாளர் தொடர்பன்றோ? இரவலர்க்கும் புரவலர்க்கும் இடையே எழுந்த நட்பு தலையாய நிலையாய உலையாத உயரிய நட்பாகும். இவ்வுயரிய நட்பு இறைக்கும் கேணியென ஏற்றமுற்று இலங்கும்.

ஒருநாட் செல்லலம், இருநாட் செல்லலம்
பலநாட் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாட் போன்ற

விருப்புடன் விளங்கி, விடுதலறியா விருப்பொடு விடைதருவராம் வள்ளல்கள்.

அகறி ரோவெம் ஆயம் விட்டெனச்;
நில்லா வுலகத்து நிலைமை தூக்கிச்
செல்கென விடுக்குவன் அல்லன்

(பொருநர் 123, 176-77)

தலைநாள் அன்ன புகலொடு வழிசிறந்து
பலநாள் நிற்பினும் பெறுகுவிர்:

(கூத்தர் 565-66)

அன்றியும் பரிசில் தருவதில் காலம் தாழ்த்துதலின்றி அன்றே நல்கும் அருமைப்பாடும் அறியத்தக்கது. இதனை

தரீஇ அன்றே விடுக்குமவன் பரிசில்
(சிறுபாண் 261)

தரீஇ அன்றே விடுக்குமவன் பரிசில்
(பெரும்பாண் 493)

மழை சுரந் தன்ன வீகை நல்கித்
தலைநாள் விடுக்கும் பரிசில்
(கூத்தர் 580-81)

என்ற அடிகளான் அறிந்து மகிழ்க. இதுகாறும் புரவலர் பண்பும் பெற்றியும் கண்டோம்.

'திருவேறு தெள்ளியராதலும் வேறு என்றார்' வள்ளுவர். அந்த அறிவும் திருவும் ஒன்றி நில்லாது வேறுபடினும், அந்தத் திருவுடைப்புரவலரும் தெள்ளியராய இரவலரும் இணைந்திருக்கும் காட்சி காண விழைந்தது போலும் கவிஞர் உள்ளம்! எனவே தான் வறுமைக்கும் வளமைக்கும் இருந்த இடையீட்டை; 'ஈயென இரத்தல் இழிந்தன்று' என எண்ணும் இரவலர் நெஞ்சத்தையும் 'இல்லென-மறுத்தல் இழிந்தன்று' என எண்ணும் புரவலர் நெஞ்சத்தையும் கலையால்—கன்னித்தமிழால் நிரப்புகின்றது நல்லிசைப் புலமை யுள்ளம் அதன் பயனே ஆற்றுப்படை—காவலரும் கலைஞரும் —இரவலரும் புரவலரும் இணைந்து நிற்கும் இணையற்ற காட்சி எனலாம். கலையைப்போற்றிய காவலர்தம் கருணையுள்ளமும் — பரந்து இடம் கொடுக்கும் விசும்புதோய் உள்ளமும் பொதுநலவுணர் வும் ஆற்றுப்படையில் அங்கை நெல்லிக்கனியென அமைந் தொளிரும் அழகே அழகு! கடமையையும் மானவுணர்வையும் ஒன்றுசேர்த்த-வடதுருவத்தையும் தென் துருவத்தையும் இணைக்கும் கலையின் நிலைகண்டு களிக்கத் தக்கதாகும்.

அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி என்ற முறையில் கலைபுரக்கும் —கலையைப் போற்றும் காவலரைப் போன்றே நாட்டுமக்களும் இரவலர்க்கும் கலைஞர்க்கும் வாட்டம் தீர வழி நெடுக உண்டியும் உறையுளும் அளித்து மகிழும் அருமைப்பாடும் ஆற்றுப் படையில் அறியக்கிடக்கின்றது.

இதுகாறும் கூறியவற்றால், ஆற்றுப்படுத்தும் முறையும், பரிசில் வாழ்க்கையின் பெற்றியும் கண்டு: இரவலருடைய எண்ணித் துணியும் இயல்பும், தக்கோரைப் புகழும் தன்மையும், மாட்சியும் மானவுணர்வும் கண்டு, மானங்காக்கும் புரவலர் பண்பும் அன்பும் கண்டு; இறுதியாக இரவலரையும் புரவலரையும் இணைக்கும் கலை யாற்றலை—கவிஞர் நெஞ்சத்தையும் கண்டுகளித்தோம்.

இங்ஙனம் ஆற்றுப்படையால் அறிவன அறிந்து மகிழ்ந்த நாம், இனி ஆற்றுப்படையின் அழகும் சுவையும் காணுமாற்றான் ஆற்றுப் படை இலக்கியங்களை ஒவ்வொன்றாக நோக்கி உளம் மகிழ்வாம்.

* பழந்தமிழ் நாட்டில் கலை வளர்ச்சி.

சாமி. சிதம்பரனார்.

நெசவுக் கலை :

பண்டைத் தமிழர்கள் நெசவுத் தொழிலே சிறந்து விளங்கினர். பருத்தி நூல் ஆடைகளையும், பட்டாடைகளையும் நெய்தனர். மிகவும் மெல்லிய ஆடைகளை நெய்வதிலே கை தேர்ந்திருந்தனர். ஆடைகளிலே பூ வேலைகள் செய்தனர். அழகு அழகான கறைகள் போட்ட உடைகளை நெய்தனர்.

"பாம்புஉரி அன்ன வடிவின ; காம்பின்
கழைபடு சொலியின், இழைஅணி வாரா,
ஒண்பூம் கலிங்கம்"

பாம்பின் தோல் போன்ற மெல்லிய பளபளத்த தோற்றம் உடையன ; மூங்கில் தண்டின் உட்புறத்தேயுள்ள வெண்மையான தோல்போல, நெய்யப்பட்டுள்ள நூல் வரிசை, கண்ணுக்குத் தெரியாத, ஒளி பொருந்திய வெள்ளிய ஆடை" —(புறம் 383)

"நோக்கு நுழைகல்லா நுண்மைய
பூக்கனிந்து, அரவுஉரிஅன்ன அறுவை"

கண்ணால் காணமுடியாத அவ்வளவு மெல்லிய நூலால் நெய்யப்பட்டது ; அழகான பூ வேலைகள் செய்யப்பட்டது ; பாம்பின் தோலைப்போல அவ்வளவு மென்மையும், வழவழப்பும், பளபளப்பும் பொருந்தியது. இத்தகைய மெல்லிய துணி."

—(பொருநர் ஆற்றுப்படை 82-83)

மேலே காட்டிய புறநானூற்று அடிகளும், பொருநர் ஆற்றுப்படை அடிகளும் பண்டைத் தமிழர்கள் மெல்லிய பருத்தி நூல் ஆடைகள் நெய்யக் கற்றிருந்தனர் என்பதை அறிவித்தன.

"நீர்ப்படு பருந்தின் இரும்சிறகு அன்ன
நிலம்தின் சிதாஅர் களைந்த பின்றை
நூலாக் கலிங்கம் வால்அரைக் கொளீஇ"

நீரால் நனைந்த பருந்தின் பெரிய சிறகைப்போன்ற தோற்றமுள்ள —நிலத்திலே புரளும் கந்தைத் துணியைக் களைந்த பிறகு,

---

* 'பழந்தமிழ் நாட்டில் கலை வளர்ச்சி' யென்னும் இக்கட்டுரை, கார்த்திகை இதழில் வெளிவந்த கட்டுரைக்கு முன் வரவேண்டியது. தவறுதலாக முன் வரவேண்டியது பின்னும் பின் வரவேண்டியது முன்னும் வெளிவந்தமைக்கு வருந்துகிறோம். (பொழிற்றொண்டர்)

நூற்காத நூலால் நெய்யப்பட்ட ஆடையைத்(பட்டாடை)தூய்மையான இடையிலே உடுத்திக்கொண்டு"

—(பதிற்றுப்பத்து பாட்டு 12)

"கொட்டைக் கரைய பட்டு உடைநல்கி"

கொட்டைக் கறைபோட்ட பட்டாடை கொடுத்து.

—(பொருநர் ஆ. ப. 165)

மேல்உள்ள பதிற்றுப்பத்தும், பத்துப் பாட்டும், பண்டைத் தமிழர்கள் பட்டாடைகள் நெய்தனர்; நல்ல அழகிய கரை போட்ட ஆடைகளை நெய்தனர்; என்ற உண்மையை உணர்த்தின.

"பட்டினும், மயிரினும், பருத்தி நூலினும்
கட்டும் நுண்வினைக் காருகர் இருக்கையும்"

பட்டு நூலாலும், எலி மயிராலும், பருத்தி நூலாலும், நெசவுத் தொழில்செய்யும், நுட்பமான தொழிலை அறிந்த நெசவாளர் வாழும் இடமும்"

(சிலப்பதிகாரம் இந்திர விழவு ஊர் எடுத்தகாதை 16–17)

இவ்வடிகள் பட்டாடைகள், கம்பளங்கள், பருத்தியாடைகள் நெய்யுந் திறமைபடைத்த நெசவாளர்கள் தமிழகத்தில் இருந்தனர் என்பதை உணர்த்தின.

"வறன்இல் புலத்தி எல்லித் தோய்த்த
புகாப்புகர் கொண்ட புன்பூம் கலிங்கம்"

வறுமை இல்லாதவள்—ஆடைகளை வெளுப்பவள் இரவிலே தோய்த்து எடுத்துக் காயவைத்த கஞ்சி பொருந்திய மெல்லிய பூவேலை அமைந்த உடை"

—(நற்றிணை பா. 90)

"சோறு அமைவு உற்றநீர் உடைக்கலிங்கம்
கோற்றல் ஆகிய கஞ்சி பொருந்திய நீரையுடைய ஆடை"

—(மதுரைக் காஞ்சி 721)

மேலே காட்டிய நற்றிணையும், பத்துப் பாட்டும், ஆடைகளை வெளுத்துக் கஞ்சியிட்டு முடமுடப்பாக்கும் கலையைத் தமிழர் அறிந்திருந்தனர் என்பதை உணர்த்தின.

பண்டைத் தமிழகத்திலே இசைக்கலை மிகவும் வளர்ந்திருந்தது; புகழ்பெற்றிருந்தது. இன்று கர்நாடக சங்கீதம் என்று போற்றப்படும் நுண்கலை பண்டைத் தமிழிசையின் வளர்ச்சிதான் என்பதே இசைக்கலை வல்லுநர் பலரின் கருத்து.

இசையும் நாடகமும் ஒன்ருேடு ஒன்று இணைந்தவை. நாடகம் இல்லாமல் இசையுண்டு. ஆனால் இசை யில்லாமல் நாடகம் இல்லை. தமிழர்கள் தமிழ் மொழியை இயல், இசை, நாடகம் என்று மூவகையாகப் பிரித்துக் கூறினர். இதுவே தமிழர்களின் கலை யுணர்ச்சியையும், கலைச் சிறப்பையும் காட்டுவதாகும்.

சிறந்த கவிதைகளும், காவியங்களும் இயற்றமிழ் வகையைச் சேர்ந்தவை. இவைகளிலே இசையுண்டு. பண்ணோடுகூடியது தான் பாடல்; பண் என்பது காதுக்கினிய ஓசை. காதுக்கினிய ஓசை யமையப்பாடுவதே பாடல். பாடல் என்று பெயர்பெற்றவை எவையானாலும் அவற்றில் இசை-பண்-அமைந்துதான் இருக்கும். இப்பாடல்களிலே முன்னிலைப்படுத்திக் கூறுவதாக அமைந் திருக்கும் பகுதிகளை யெல்லாம் நாடகத் தமிழிலே சேர்த்து விடலாம். ஆகவே இயற்றமிழ் என்று சொல்லப்படுவதில் இசை யும், நாடகமும் இணைந்து கிடக்கின்றன.

பக்க வாத்தியங்களுடன் இணைந்து பாடும்படி அமைத்திருக் கும் பாடல்கள் இசைத் தமிழ் வகையைச்சேர்ந்தவை. இப் பாடல்களிலும் இலக்கண அமைதியுண்டு; முன்னிலைப்படுத்திக் கூறும் பாடல்கள் உண்டு. ஆகவே இசைத் தமிழ் என்பதிலும் இயற்றமிழும், நாடகத் தமிழும் இணைந்துதான் இருக்கின்றன.

நாடகமாக – பாத்திரங்கள் ஒன்ருேடு ஒன்று பேசிக்கொள் ளும் வகையில் எழுதப்பட்டிருக்கும் நூல்களிலும், இயற்றமிழும் உண்டு; இசைத் தமிழும் உண்டு. பண்டைக்கால இலக்கியங்கள் எல்லாம் இயல், இசை, நாடகம் மூன்றும் அமைந்த நூல்களாகத் தான் காணப்படுகின்றன. இம்மூன்று தன்மையும் அமைந்த நூல்களாகத்தான் பண்டைத் தமிழ்க் கவிதைகள் எழுதப் பட்டன. நாளடைவில்தான், இயற்றமிழ் நூல்கள்-இசைத்தமிழ் நூல்கள்-நாடகத் தமிழ் நூல்கள் என்ற தனிப்பிரிவுகள் ஏற்பட் டிருக்கவேண்டும்.

பண்டைத் தமிழகத்தில் இசைக் கலை - நாடகக் கலைகளை வளர்ப்பதற்கென்று ஒரு தனிப்பட்ட வகுப்பினரே இருந்தனர்.

கூத்தர் என்பவர் ஒரு பிரிவினர். இவர்கள் தொழில் கூத் தாடுதல், குதித்தல்-கூத்து. கூத்தில் இருவகை உண்டு; ஒன்று ஏதேனும் ஒரு கதையை நடித்துக்காட்டுவது; மற்ருென்று ஒரு பாடலைப் பொருள் விளங்கும்படி அபிநயித்துக் குதிப்பது. கதையின் அபிநயம் பிடித்தாடும் கூத்துக்குத்தான் நடனம்; நாட்டியம் என்று கூறுகின்ருேம். கதை தழுவிய கூத்தை

நாடகம் என்று நவில்கின்றோம். இத்தகைய கூத்தாடிகளைத்தான் பண்டைக்காலத்தில் கூத்தர் என்று கூறுகின்றனர். இன்றும் தமிழ்நாட்டில் கூத்தாடிகள் என்று ஒரு இனத்தினர் இருக்கின்றனர்; இவர்கள் தொழில் கூத்தாடுவதுதான்.

பாணர் என்பவர் மற்றொரு பிரிவினர். பாண் என்பது யாழ். பண் என்பதிலிருந்து பாண் பிறந்தது. பண்கள் என்பது இசை, பண் என்னும் இசையைத் தரும் கருவியைப் பாண் என்று கூறினர். பாண் வாசித்தலைத் தொழிலாகக் கொண்டவர்கள் பாணர்கள். பாணர்கள் வீட்டுப் பெண்களைப் பாடினிகள் என்று அழைத்தனர். இவர்கள் வாய்ப்பாட்டு பாடுவதிலே சிறந்தவர்கள். யாழ் வாசிப்பவர்களைப் பாணர்கள் என்றும் அவர்கள் வீட்டுப் பெண்களைப் பாடினிகள் என்றும் அழைத்தனர்.

பொருநர் என்பவர்கள் மற்றொரு பிரிவினர். பொருநர் களிலே, ஏர்க்களம் பாடுவோர், போர்க்களம் பாடுவோர், பரணி பாடுவோர் என்று பலவகையினர் உண்டு என்று நச்சினார்க்கினியர் கூறியுள்ளார். ஏருழுது விளைந்த தானியத்தைக் குவிக்கும் இடத்தையும், அவ்விடத்திற்குரிய வணிகர், வேளாளர், குறுநில மன்னர் முதலியோரையும் புகழ்ந்து பாடுவது ஏர்க்களம் பாடுவதாகும். போர்க்களத்தைப் போற்றிப் பாடுதல் போர்க்களம் பாடுவதாகும். போரிலே வெற்றிபெற்ற அரசனுடைய வீரத்தைப் புகழ்ந்து பாடுவது பரணி பாடுவதாகும். இவ்வாறு பிறரை புகழ்ந்து பாடிப் பரிசுபெற்று வாழ்க்கை நடத்துவோர்க்குப் பொருநர் என்று பெயர். பொருநரைச் சேர்ந்த பெண்களுக்கு விறலியர் என்று பெயர். விறல் வெற்றி; திறமை.

கூத்தர், பாணர், பொருநர் முதலியவர்கள் ஒரே வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம்; அவர்கள் மேற்கொண்ட தொழில்கள் காரணமாக அவர்களைத் தனித்தனிப் பெயரிட்டு அழைத்தனர். இவ்வாறு நினைக்க இடம் உண்டு. இவ்வுண்மையைத் தொல்காப்பியத்தால் காணலாம்

“கூத்தரும், பாணரும், பொருநரும், விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்”

ஆடுவதிலேவல்ல கூத்தரும், யாழிசைத்துப் பாடுவதிலே சிறந்த பாணரும், புகழ் கூறுவதிலே வல்ல பொருநரும் இவைகள் எல்லாவற்றிலும் தேர்ந்த விறலியரும், ஆகிய இந்நால்வரும், வழியிலே தம் கண்ணெதிரே தோன்றிய வறியோர்க்கு, தாம்

யாரிடத்திலே செல்வம் பெற்ரேம் என்பதை எடுத்துரைப்பர்; அவரிடத்திலே சென்று செல்வம்பெற்று வறுமை நீங்கும்படி கூறுவர். இவ்வாறு கூறும் பகுதியும்" என்பது தொல்காப்பியம்

—(தொல், பொருள், புறத்திணை 36)

இத்தொல்காப்பியச் சூத்திரத்தால் இசை, நாடகக்கலைகளையே குலத் தொழிலாகக்கொண்ட ஒரு கூட்டத்தினர் தமிழகத்தில் இருந்தனர் என்பதைக் காணலாம்.

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட்டு ஆயிருபாங்கினும்
உரியதாகும் என்மனர் புலவர்."

புனைந்துரை வகையாலும், உலகியல் வழக்கத்தாலும் புலவரால் பாடுதற்கு அமைந்த, புலவர் மரபு வழக்கமானது, கலிப்பாட்டு, பரிபாட்டு ஆகிய இருவகைப்பாடல்களாலும் பாடுவதற்கு உரியதாகும். இவ்வாறு புலவர்கள் கூறுவார்கள்"

—(தொல்–பொருள் அகத்திணை 53)

இச்சூத்திரத்தால் ஒரு உண்மையைக் காணலாம். கருத்துள்ள கற்பனைக் கதைகளையும் நாடகமாக நடித்து வந்தனர்; நடந்த வரலாற்று நிகழ்ச்சிகளையும் நாடகமாக நடித்து வந்தனர். இவ்விருவகைக் கதைகளையும் கலிப்பாவிலோ, பரிபாட்டிலோ பாடும் வழக்கம் பண்டைப் புலவர்களிடம் இருந்தது. இதுதான் மேலே காட்டிய தொல்காப்பியச் சூத்திரத்தால் நாம் அறியும் உண்மை.

பண்டைத் தமிழகத்திலே, இசையும் கூத்தும் பொதுமக்களின் பொழுதுபோக்குக்குச் சிறந்த கருவிகளாக இருந்தன. மக்கள் சமூகத்தில் உள்ள பல பிரிவினர்க்கும் இவைகள் இன்பத்தை அளித்து வந்தன. இவைகளை எல்லா மக்களும் கேட்டும், கண்டும் இன்புற்றனர் என்பதை இலக்கியங்களிலே காணலாம். இதற்கு ஒரு உதாரணத்தைக் காண்போம்.

"ஒரு மடமங்கை, அவள் தனக்குப் பிடித்த காதலன் ஒருவனுடன் கள்ளக் காதல் உறவு கொண்டிருந்தாள். இது அவளுடைய பெற்ருேர்களுக்குத் தெரியாது. அவளுடைய தோழிக்குக்கூட அரைகுறையாகத்தான் தெரியும்.

இச்சமயத்தில் ஒருநாள் அம்மட மங்கையை மணமகளாக வேண்டி அயலார் சிலர் பரிசத்துடன் வந்தனர். அதைக்கண்ட அம்மங்கை, உடனே தனது உண்மை நிலையைத் தன் தோழி

யிடம் சொல்லிவிட்டாள். "எனது காதலன் வேறொருவன். இப்பொழுது பரிசத்துடன் வந்திருப்பவர்க்கு நான் உரியவள் அல்லள்" என்ற உண்மையை உரைத்தாள். இச்செய்தி குறுந்தொகைப் பாடல் ஒன்றில் காணப்படுகின்றது. இப்பாடலில் பண்டைக்காலத்தில் தமிழகத்தில் பலவிடங்களில் கூத்து மேடைகள் இருந்தன என்ற உண்மை காணக்கிடக்கின்றது.

"மன்னர் குழீஇய விழவினானும்
மகளிர் தழீஇய துணங்கை யானும்
யாண்டும் காணேன் மாண்தக்கோனை;
யானும்ஓர் ஆடுகள மகளே; என்கைக்
கோடுஈர் இலங்குவளை நெகிழ்த்த
பீடுகெழு குரிசிலும் ஓர் ஆடுகளமகனே"

பெருமையும் என்னை மணக்கும் தகுதியும் உள்ளவன் என் காதலன். அவனை வீரர்கள் கூடி நடத்துகின்ற விழாவினும் காணவில்லை. மகளிர் ஒருவரோடு ஒருவர் தழுவிக்கொண்டு ஆடுகின்ற துணங்கைக் கூத்து நடைபெறும் இடங்களினும் காணவில்லை. நானும் துணங்கைக் கூத்தாடும் இடத்திலே சென்று துணங்கை ஆடுவதற்கு உரிய ஒருத்திதான்; என் கையில் உள்ள சங்கைப் பிளந்து செய்த வளையல்களைக் கழன்று விழும்படி செய்த அந்தப் பெருமையுள்ள தலைவனும் கூத்தாடும் இடங்களில் சுற்றித் திரிகின்ற ஒரு ஆண்மகன்தான்"

—(குறுந்தொகைப் பாட்டு 31)

வீரர்கள் தங்கள் வெற்றியைத் தாம் வாழும் இடங்களில் கூடிக் கொண்டாடுவார்கள். அந்த வெற்றி விழாவில் கூத்தும் பாட்டும் நடைபெறும். அதைப் பொதுமக்கள் பலரும் கண்டு களிப்பார்கள். இவ்வுண்மையை இப்பாடலில் உள்ள "மள்ளர் குழீஇய விழவினானும்" என்ற தொடரால் காணலாம்.

பெண்கள் பலர் கூடி ஒருவரை ஒருவர் தழுவிக்கொண்டு துணங்கைக் கூத்தாடுவர் என்பதை "மகளிர் தழீஇய துணங்கை யானும்" என்ற வரியால் காணலாம்.

பெண்கள் துணங்கைக் கூத்தாடும் இடத்திலே ஆண்களும் இருப்பார்கள்; அவர்கள் தாங்கள் விரும்பும் பெண்களுக்குக் கை கொடுப்பார்கள். இதனை "யானும்ஓர் ஆடுகள மகளே" "குரிசிலும்ஓர் ஆடுகள மகனே" என்ற தொடர்களால் அறியலாம்.

"கூத்தாட்டு அவைக்குழாத்து அற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந்து அற்று"

என்பது திருக்குறள். இதுவும் தமிழகத்தில் கூத்து மேடைகள் இருந்தன என்பதைக் குறிப்பன ஆகும். "பெரிய செல்வம் வந்து சேர்தல் கூத்தாடும் இடத்தில் கூட்டம் கூடுவது போன்ற தாகும்" என்பதே இக்குறளின் பொருள்.

பண்டைத் தமிழர்கள் யாழ், குழல், மத்தளம் போன்ற வாத்தியங்களைச் செய்ய அறிந்திருந்தனர். இசைக்குத் துணையான கருவிகள் பலவற்றைக் கண்டறிந்தனர். அவற்றைச் செய்தனர். இவ்வுண்மைகளையெல்லாம் பத்துப் பாட்டிலே, பொருநர் ஆற்றுப்படை, சிறுபாண் ஆற்றுப்படை, பெரும்பாண் ஆற்றுப் படை முதலியவைகளிலே சிறப்பாகக் காணலாம்.

சிலப்பதிகார அரங்கேற்றுக்காதை இசையைப்பற்றியும் நாடகத்தைப்பற்றியும் விரிவாகக் கூறுகின்றது.

கூத்திலே அரசவைக் கூத்து, அல்லவைக் கூத்து, அதாவது அரசர்க்காடும் கூத்து, பொதுமக்களுக்காக ஆடும் கூத்து என்ற பிரிவினை பண்டைத் தமிழகத்தில் இருந்ததில்லை. இவைகள் பிற்காலத்தில் ஏற்பட்ட பிரிவுகள் என்றுதான் கூறவேண்டும்.

பண்டைத் தமிழர்கள் வளர்த்துவந்த பாட்டும் கூத்தும் இன்று மிகுந்த வளர்ச்சி பெற்றிருக்கின்றன என்பதில் ஐய மில்லை. அக்காலத்தில் ஒரு குலத்தொழிலாக இருந்த இவைகள் அனைவர்க்கும் உரிய பொதுத் தொழிலாக மாற்றம் அடைந் திருப்பது ஒன்றே. இவற்றின் வளர்ச்சியைக் காட்டுவதாகும். அரசர்க்காடும் கூத்து, பொதுமக்களுக்காடும் கூத்து என்னும் பிரிவும் இக்காலத்தில் இல்லை. இதுவும் வளர்ச்சிக்கு அடையாள மாகும்.

தமிழே இயல், இசை, நாடகம் என்ற முப்பகுதியை உடையது. மூன்றும் கலந்த நூல்களே பண்டைக்காலத்தில் பிறந்தன. பின்னால்தான் இயற்றமிழ்நூல், இசைத்தமிழ்நூல், நாடகத்தமிழ்நூல் என்று தனித்தனியாக எழுதப்பட்டன. இசைக்கலை, நாடகக்கலைகள் ஒரு குலத்தினரின் தொழிலாக இருந்துவந்தன. கூத்தில் நடனம், நாடகம் என்ற இருவகை உண்டு. பாட்டுக்கு அபிநயம் பிடிப்பது நடனம்; கதை தழுவி யது நாடகம், இத்தொழில்களிலே ஆண்களும், பெண்களும் ஈடுபட்டிருந்தனர். நாடகமும் பாட்டும் பொதுமக்களுக்குப் பொழுதுபோக்கும் இன்பக் கருவிகளாகப் பயன்பட்டுவந்தன. அரசர்க்காடும் கூத்து; அல்லாதார்க்கு ஆடும் கூத்து; என்ற பிரிவு பண்டைக் காலத்தில் இருந்ததில்லை; பிற்காலத்தில்தான் பிறந் தது. இசையும் கூத்தும், இன்று குலத் தொழிலாக இல்லாமல்

பொதுத் தொழிலாக மாறிவிட்டது. அனைவர்க்கும் பொதுச் செல்வமாகவும் ஆகிவிட்டது. இவ்வுண்மைகளை மேலே கூறியவற்றைக்கொண்டு அறியலாம்.

போட்டியின்மூலம் கலை வளர்ச்சி :

கலைகள் போட்டியின்மூலம் பண்டைக் காலத்தில் வளர்க்கப் பட்டுவந்தன. கலைஞர்கள் தங்களைச் சிறந்தவர்கள் என்று காட்டிக்கொள்ள விரும்புவது இயற்கை. இதற்காக, அவர்கள் தாங்கள் கற்ற கலைத்துறையிலே மேலும் மேலும் முன்னேற முயல்வார்கள்.

பண்டைக் காலத்தில் கலைஞர்கள் ஒருவரோடு ஒருவர் போட்டிபோட்டு முன்னேறி வந்தனர். நடனமாடுவோர், பண் பாடுவோர், சூதாடுவோர் முதலியவர்கள் தங்கள் திறமையைக் காட்ட மற்றவர்களுடன் போட்டியிடுவார்கள். இவர்கள் போட்டியிடுவதற்கான மன்றங்கள் இருந்தன. இம்மன்றங்களைக் காட்டக் கொடி கட்டியிருப்பர்.

ஆடல் கற்றவர்களை, ஆடல் கற்றவர்கள் போட்டியிட்டு வெல்லவும்; பாடல் பயின்றவர்களை, பாடக்கற்ற பாணர்கள் வெல்லவும்; சூதாட்டத்தில் வல்லவர்களை அச்சூதாட்டத்திலே வல்லவர்கள் வெல்லவும்; இவையல்லாத ஏனைய கலைகளிலே வல்லவர்கள் அக்கலைகளிலே வல்லவர்கள் விவாதித்து வெல்லவும் கொடிகட்டப்பட்டிருந்தது. புகழ்பெற்ற நல்ல புதுநீர் நிறைந்த தடாகம் போன்ற குளிர்ந்த சுனையின் பக்கத்திலே இக் கொடி பறந்துகொண்டிருந்தது". என்று பரிபாடலில் காணப்படுகின்றது. திருப்பரங்குன்றத்திலே இத்தகைய கலைப்போட்டிகள் நடந்தன என்று சொல்லப்படுகின்றது.

ஆடல் நவின்றோர் அவர்போர் செறுப்பவும்,
பாடல் பயின்றோரைப் பாணர் செறுப்பவும்,
வல்லாரை வல்லார் செறுப்பவும்,
அல்லாரை அல்லார் செறுப்பவும்
ஓர்சொல்லாய்ச்
செம்மைப் புதுப்புனல்
தடாகம் ஏற்ற தண்சுனைப் பாங்கர்ப்
படாகை நின்றன்று.

(பரிபாடல் 9. வரி 72-78)

இவ்வடிகள், பண்டைத் தமிழர்கள் நுண்கலைகளை எவ்வாறு வளர்த்து வந்தனர் என்பதை அறிவிக்கின்றன.

25 JAN 1960